# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

டிசம்பர் 2007

விலை ரூ.10/-









மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழகத்தின் 31-ஆவது மாவட்டமாக புதிய அரியலூர் மாவட்டத்தை 23.11.2007 அன்று
தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு மத்திய - மாநில அமைச்சர்கள் உடன் உள்ளனர்.

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
கார்த்திகை - மார்கழி டிசம்பர் 2007
மலர் : 39 இதழ் : 6

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

**முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழைதிருத்துபவர்

**ஜி. சந்தானம்**

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னுஞ் செருக்கு**

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் நிகழ்ச்சிகள்

❖ 17 தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சைகள் செய்ய அரசு நிதியுதவி ........ 2

❖ திருவள்ளுவர் மாவட்டத்தில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து டிட்கோ அமைக்கும் மருத்துவ கிராமம் ........ 5

❖ பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல் ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும் ........ 8

❖ மருத்துவத்துறையில் மகத்தான சாதனைகள் ........ 12

❖ மலேசியத் தமிழர்களின் துயரத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் -மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் ........ 16

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் தமிழகத்தில் வியப்பூட்டும் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் ........ 27

❖ பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் சிறந்த மேனிலைப்பள்ளிகளில் பயில நிதியுதவி வழங்கிடும் புதிய முன்னோடித் திட்டம் ........ 33

❖ சிறுசிறு கிராமங்களை பட்டிதொட்டிகளை இணைக்கின்ற வகையில் ரயில் பாதைகள் அமையவேண்டும் ........ 46

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
### திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்

□ அரியலூர் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை அனைத்தும் நிறைவேற்றப்படும் ........ 57

□ நகர்ப்புற ஏழை மக்களுக்கு ரூ.1,437.93 கோடியில் அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம் ........ 62

□ சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கினார் ........ 63

□ உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் குறித்த மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அறிக்கைகள் ........ 65

□ மணிமேகலை விருது ........ 67

□ உள்ளாட்சித்துறையில் நிரப்பப்படாமல் இருந்த பணியிடங்களில் இதுவரை 15,311 பணியாளர்கள் நியமனம் ........ 70

❖ மிக நுணுக்கமாகவும் கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகின்ற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றியுள்ளது
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரை ..... 74

### அட்டைப் பட விளக்கம்

*முதலாம் பக்க அட்டை* : சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்பினை வழங்கினார்கள். (27.11.2007)

இரண்டாம் பக்க அட்டை : தமிழகத்தின் 31ஆவது மாவட்டமாக புதிய அரியலூர் மாவட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். உடன் மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (23.11.2007)



# 17 தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் செய்ய அரசு நிதியுதவி வழங்கும் புதிய திட்டம்

மக்களின் வாழ்க்கையில் தற்போதைய மாறிவரும் சூழ்நிலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், நடைமுறை வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் போன்றவை காரணமாக இதய நோயினால் பாதிக்கப்படுவோர் அதிகரித்து வருகிறார்கள். குறிப்பாக, இளம் சிறார்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இதய நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக அரசு மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சைக்காகக் குழந்தைகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ள விவரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்**



கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளின் அரிய உயிர்களைக் காக்கும்பொருட்டு தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ள 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு உடனடியாக அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக, ஆண்டு வருவாய் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாயுள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதன்படி மூடிய இதய அறுவை சிகிச்சை (Closed Heart Surgery) மேற்கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சை (Ordinary Open Heart Surgery) மேற்கொள்வதற்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சை (Complex Open Heart Surgery) மேற்கொள்வதற்கு எழுபதாயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் 21.11.2007 அன்று கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களும், 17 தனியார் மருத்துவமனைகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து, அரசு மருத்துவமனைகளில் இதய அறுவைச் சிகிச்சைக்காகப் பதிவு செய்துகொண்டு காத்திருக்கும் 20 குழந்தைகளுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள 10 தனியார் மருத்துவமனைகளுக்குத் தமிழக அரசின் சார்பில் அனுமதிகளை வழங்கி இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்திட தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்து கொண்டுள்ள 17 தனியார் மருத்துவ மனைகள் விவரம் பின்வருமாறு:

(1) இராமச்சந்திரா மருத்துவமனை,
போரூர், சென்னை–116

(2) அப்பல்லோ மருத்துவமனை,
சென்னை–6.

(3) பிரான்ட்டியர் லைப்லைன் மருத்துவமனை,
சென்னை–101.

(4) ஆர்வே ஹெல்த்கேர் லிமிடெட், சென்னை–18.

(5) மெட்ராஸ் மெடிக்கல் மிஷன்,
சென்னை–37

(6) கே.ஜெ.மருத்துவமனை, சென்னை–84.

(7) சூரியா மருத்துவமனை, சென்னை–93

(8) மியாட் மருத்துவமனை, மனப்பாக்கம், சென்னை–89.

(9) லைப்–லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சென்னை–96.

(10) செட்டிநாடு மருத்துவமனை, கேளம்பாக்கம். காஞ்சிபுரம், மாவட்டம்–606103.

(11) வடமலையான் மருத்துவமனை, மதுரை–625002.

(12) அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, மதுரை–625020.

(13) மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625107.

(14) பி.எஸ்.ஜி. மருத்துவமனை, கோயம்புத்தூர்–642004.

(15) ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனை, கோயம்புத்தூர்–641044.

(16) கே.ஜி.மருத்துவமனை, கோயம்புத்தூர்–641018.

(17) ஜி.குப்புசாமிநாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர்–641037.

## "ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு அவர்கள் பயிலும் பள்ளியிலேயே ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டம்"

### துவக்க விழா

"ஊனத்தின் தன்மை 40 சதவிகிதத்திற்கும் மற்றும் அதற்கு மேல் இருக்கும் அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் மருத்துவ குழுவின் மூலமாக மருத்துவ சான்றிதழ் மற்றும் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 4.6 இலட்சம் தேசிய அடையாள அட்டைகள் தமிழ் நாட்டில் உள்ள ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு உள்ளது. **31.3.2007 க்குள்** தகுதி உள்ள அனைவருக்கும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும். இந்த தேசிய அடையாள அட்டையின் அடிப்படையில் ஊனமுற்றோர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அரசு மருத்துவமனைகளுக்கு சென்று, மருத்துவ குழுவின் மூலம் மருத்துவ சான்றிதழ் பெறுவதில் சிரமம் உள்ளது. எனவே, ஊனமுற்ற மாணவ, மாணவியர்களின் சிரமத்தினை தவிர்க்கும் வகையில், அவர்கள் பயிலும் பள்ளிக்கு மாவட்ட மருத்துவக் குழு சென்று, அவர்களைப் பரிசோதித்து, அக்குழு வழங்கும் மருத்துவ சான்றின் அடிப்படையில், மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் மூலம் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை, 15.11.2007 அன்று சிறுமலர், செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளியில், (Little Flower Convent Higher Secondary School for the Deaf) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்பள்ளியில் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையை இதுவரை பெறாத **43** செவித்திறன் குறையுடைய மாணவியர்களுக்கும் மற்றும் **33** பார்வையற்ற மாணவியருக்கும், ஒரே நாளில் மருத்துவ குழுவின் மூலம் பரிசோதித்து, மருத்துவ சான்றிதழும், ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையும் இப்பள்ளியிலேயே உடனடியாக வழங்கப்படும். மேலும், இதே போன்று மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊனமுற்றோர்களுக்கான தேசிய அடையாள அட்டை அவர்கள் பயிலும் பள்ளியிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது."



# திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து டிட்கோ அமைக்கும் மருத்துவ கிராமம்

இருதய அறுவை சிகிச்சைத் துறையில் முன்னோடியாகத் திகழ்பவர் டாக்டர் கே.எம்.செரியன். இவர், நாட்டிலேயே முதன்முதலில் இருதய இரத்தக் குழாய் மாற்று அறுவை சிகிச்சை, இருதய நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை இருதய மாற்று அறுவை சிகிச்சை முதலியவற்றை செய்தவர் ஆவார். இவர், டாக்டர் கே.எம்.செரியன் ஹார்ட் பவுன்டேஷன் அமைத்து அதன் மூலமாக இருதய துறையில் சிறப்பான மருத்துவ வசதிகளுடன் கூடிய ஒரு மருத்துவமனையை பிரான்டியர் லைப்லைன் என்ற நிறுவனத்தின் பெயரில் நடத்தி வருகிறார். டாக்டர் கே.எம்.செரியன், டிட்கோவுடன் இணைந்து திருவள்ளூர் மாவட்டத்தில் "பிரான்டியர் மெடிவில்லி" என்ற பெயரில் மருத்துவ கிராம திட்டத்தை உருவாக்க உள்ளார்.

மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பிரான்டியர் லைப்லைன் மருத்துவமனையில் அனைத்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்
கையெழுத்தானது

விதமான இருதய, நுரையீரல் சார்ந்த நோய்களுக்கு முழுமையான மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர், இலங்கை, ஈராக், சிரியா, பாலஸ்தீனம், பஹரைன், பிஜி மற்றும் மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்தும் இருதய நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். பிரான்டியர் லைப்லைன் ஸ்டெம்செல் மற்றும் திசு பொறியியல் சார்ந்த



பொருள்களைத் தயாரித்துப் பயன்படுத்தும் ஆராய்ச்சியில் வெற்றிகண்டு வருகின்றது. இதற்கான ஆராய்ச்சிகள் டைசல் உயிரியல் பூங்காவில் நடைபெற்றுவருகின்றது. இந்த டைசல் பூங்கா டிட்கோவால் உருவாக்கப்பட்டதாகும்.

பிராண்டியர் லைப்லைன் மற்றும் டிட்கோவால் உருவாக்கப்படவுள்ள மருத்துவ கிராமம், ஐந்து ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட இருக்கின்றது. இதில் 1,000 படுக்கை வசதிகளுடன் கூடிய சிறப்பான மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனை உருவாக்கப்படவுள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் புணர் வாழ்வு மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யோகா போன்ற மருத்துவ வசதிகளும் செயல்படவிருக்கின்றன. மேலும், மருத்துவப் பல்கலைக் கழகம், மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி செய்ய நுண்கிருமிகளற்ற பகுதிகள், ஆராய்ச்சி உயிரினங்கள் கூடம் மற்றும் ஆசிய பசிபிக் உயிர் குழுமத்துடன் இணைந்து உலக தாவரவியல் பூங்காவும் அமைக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாக சுற்று வட்டார கிராமத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் வடசென்னைப் பகுதி அனைத்து விதத்திலும் வளர்ச்சி அடைய ஊக்கமளிப்பதாக அமையும். ஏனெனில், மேற்கு மற்றும் தெற்கு சென்னைப் புறநகர்ப் பகுதிகளைவிட வடசென்னைப் புறநகர்ப் பகுதி குறைந்த வளர்ச்சி அடைந்துள்ளது.

இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 450 கோடியாகும். இதற்காக 125 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனம் வாங்கியுள்ளது. கி.பி.2010 இல் உலகில் உள்ள மொத்த 18 உயிர் மருத்துவமனைகளில் ஒன்றாகவும், இந்தியாவிலேயே முதன் முதலில் அமையவிருக்கின்ற மருத்துவ அறிவியல் பூங்கா மற்றும் உயிர் மருத்துவமனை இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மருத்துவ அறிவியல் பூங்காவைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்காக மருத்துவ முகாம்களை நடத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலமாக சிறந்த மருத்துவ சேவை தமிழகத்தின் பின்தங்கிய கிராமங்களுக்கும் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் நிதி ஒதுக்கியுள்ளது. இதனை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, தொழில்நுட்ப வளர்ச்சி ஆணையம் மற்றும் உடல் நல ஆராய்ச்சித் துறை மூலமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது.

21.11.2007 அன்று கூட்டுத்துறை ஒப்பந்தத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் டாக்டர் கே.எம்.செரியன், தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர், பிரான்டியர் லைப்லைன் மற்றும் திரு.இராமசுந்தரம், இ.ஆ.ப., தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர், டிட்கோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழக மின் வாரியத் துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தலைமைச் செயலர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., தொழில் துறைச் செயலர் திரு.எம்.எப்.பரூக்கி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலர் திரு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., மற்றும் டிட்கோ செயல் இயக்குநர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர். ✶

# குப்பையிலிருந்து உரம் தயாரித்து பூங்காக்களுக்கு எருவாகப் பயன்படுத்த சென்னை மாநகராட்சி திட்டம்

சென்னை மாநகராட்சியை தற்போது குப்பையில்லா நகரமாக உருவாக்கும் முகமாக, மக்கும் குப்பையை உரமாக்க பல பகுதிகளில் 108 கட்டுமான உரநிலையங்கள் ரூ.32 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. தற்போது வீட்டுக்கு வீடு சென்று மூன்று சக்கர மிதிவண்டிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று சேகரிக்கப்படும் குப்பையில், மக்கும் குப்பையினை இந்த கட்டுமான உரநிலையங்களில் சேகரித்து உரமாக்கும் செயல்முறையை முதற்கட்டமாக – மண்டலம் 4இல் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உரநிலையத்திலும் சுமார் 500 கிலோ முதல் 1 டன் வரை குப்பையினை உரமாக்கலாம். இந்தத் திட்டம் பரவலாக பிற மண்டலங்களிலும் செயல்படுத்த ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இதில் குப்பைகள் படுகைபடுகையாகக் கொட்டப்பட்டு, ஒவ்வொரு படுகையின் மீதும் சாணம் கரைத்துத் தெளிக்கப்படும். பின்னர், அதன் மீது மணல் சிறிய படுகையாகப் போடப்படும். இவ்வாறு ஒவ்வொரு படுகையாக கட்டுமானத்தின் உயரத்திற்கு குப்பை உரமாக மாற்றப்படும். குப்பைகள் சுமார் 45 முதல் 60 நாட்களுக்குள் உரமாக மாறிவிடும். இந்த உரம் தோட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கும் பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தினால், குப்பை கொட்டும் வளாகங்களுக்குச் செல்லும் குப்பையின் அளவு வெகுவாகக் குறையும். மேலும் நிலத்திற்கு வளம் சேர்க்கும் உரமும் உருவாகும். பொதுமக்கள் இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினால் குப்பைகளை உரமாக்குவதுடன், குப்பை இல்லா நகரமாக சென்னை மாநகரை உருவாக்கமுடியும். மேலும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பொதுமக்கள் பிரித்து வழங்கினால் தூய்மையான நகராக சென்னை மாநகரை உருவாக்கலாம்.

# பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல் ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும்

சென்னை தலைமைச் செயலகத்தில் 19.11.2007 அன்று நடைபெற்ற, **"இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்"** தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை :



இன்று இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்ட தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமிதம் கொள்கின்றேன்.

நாம் கூடியிருக்கின்ற இந்த "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயர் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக பல்வேறு விதமாக பலர் பாடுபட்டிருந்தாலுங்கூட உணர்ச்சிமிக்க கவிதைகளின் மூலமாக தன்னுடைய பங்களிப்பைச் செய்த ஒரு பெரும் பாவலருடைய பெயர் 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்பதாகும்.

இங்கே நாம் கூடியிருப்பது, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட உற்ற வழிகள் எவை எவை என்பதையெல்லாம் சிந்தித்து



அதன்படி செயல்படுவதற்காக நம்மைத் தயார்படுத்திக்கொள்ள இந்த நிகழ்ச்சியிலே நாம் கூடியிருக்கின்றோம்.

முதியோர் ஒய்வூதிய தேசியத் திட்டம் என்பது, பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல், ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும். 1962 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் வாழ்கின்ற முதியோர்களுக்கு மாதம் 20 ரூபாய் உதவித் தொகை வழங்குவது என்று அறிவிக்கப்பட்டு அது நடைமுறையிலே இருந்தது. அப்போது இந்தத் திட்டத்திற்கு இந்திரா காந்தி முதியோர் ஒய்வூதிய தேசியத் திட்டம் என்ற பெயர் இல்லை என்றாலுங்கூட இதனுடைய குறிக்கோளாக முதியோர்களுக்கு ஒய்வூதியம் அளிப்பது என்பது இருந்தது. 20 ரூபாய்தானா என்று அலட்சியப்படுத்த முடியாது. 20 ரூபாய் வழங்கிய அந்தக் காலகட்டத்தில் பணத்தின் மதிப்பு – இன்றைய தினம் அந்த 20 ரூபாயை மாற்றி பல மடங்கு அதிகமாகத் தருகிற இந்த காலகட்டத்திலுள்ள பண மதிப்பு இவைகளை யெல்லாம் நாம் அறியாதவர்கள் அல்ல.

1957 இல், நானும் நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் சட்டசபைக்கு வந்தபோது, நிதிநிலை அறிக்கையை அன்றைய நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் படித்த போது, "100 கோடி ரூபாய் பட்ஜெட் – சதமடிக்கப் போகிறேன்" என்று பெருமையாகச் சொன்னார். 100 கோடி ரூபாய் என்பது அந்தக் காலத்திலே – அந்த பட்ஜெட்டுக்கு அவ்வளவு பெரிய மதிப்பாக இருந்தது. இன்றைக்கு – 40 ஆயிரம் கோடி ரூபாய் – 50 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவிற்கு நம் மாநில பட்ஜெட்டினுடைய நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது 1962இல் 20 ரூபாய் முதியோர்களுக்கு மாத ஊதியம் கொடுத்ததை நாம் சாதாரணமாகக் கருத முடியாது. அன்றுள்ள நிலையில் அது முதியோர்களுக்காகத் தரப்பட்ட உரிய நிதி என்று தான் நாம் கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு, தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு அந்தத் தொகை உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு ஆட்சியிலும் அந்தத் தொகை உயர்ந்து உயர்ந்து கடந்த ஆண்டு நாங்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது 200 ரூபாய்

முதியோர்களுக்கு கொடுப்பது என்று வழங்கப்பட்டு வந்தது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் தொகை தங்களுக்குப் போதுமானதாக இல்லை என்ற முறையீடு முதியோர்களிடமிருந்து – அந்த அமைப்புகளிடமிருந்து வந்த காரணத்தால் அதை 400 ரூபாயாக ஆக்கி, இந்த ஓராண்டு காலமாக முதியோர்களுக்கு ஓய்வூதியத் தொகை 400 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த 400 ரூபாயில் 200 ரூபாய் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின் சார்பாக மத்திய அரசால் வழங்கப்பட்டு, மீதமுள்ள 200 ரூபாயை மாநில அரசே முதியோர்களுக்காக வழங்குகின்ற ஒரு நிலை இன்றைக்கு உருவாகி இருக்கின்றது.

இந்த 400 ரூபாய் அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளில் அவர்களுடைய தேவைக்கேற்ப விரிவடையவும் கூடும். ஆனால், இது 200 ரூபாயாக இருந்து 400 ரூபாயாக ஆகியிருக்கின்றது என்ற செய்தியை மாத்திரம் உங்களுக்கு இப்போது தர விரும்புகின்றேன். நாம் தருகின்ற இந்த ரூபாயை மத்திய அரசு சிந்தித்துப் பார்த்து இந்த முதியோர் ஓய்வூதிய நிதியாக அவர்கள் வழங்குகின்ற நிதியிலே ஒட்டுமொத்த 400 ரூபாயையும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அப்போதுதான் வீட்டிலே வேலையற்று, வேலையைப் பார்க்க வாய்ப்பற்று, உதவியற்று இருக்கின்ற முதியோர்களுக்கு தக்க நிவாரணமாக அது அமைய முடியும் என்பதால், இந்த நாளில் அன்னை

**“நாம் தருகின்ற 400 ரூபாயில் 200 ரூபாய் நம்முடைய பணமும், 200 ரூபாய் மத்திய சர்க்கார் பணமும் இருக்கின்றது. அந்த மொத்தம் 400 ரூபாயையும் மத்திய அரசே தருகின்ற வகையில் இருந்தால் இன்னும் நலமாக இருக்கும்.”**



இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளைப் போற்றுகின்ற இந்த நல்ல நாளில், அவர்களுடைய பெயரால் நடைபெறுகின்ற இந்த ஓய்வூதிய தேசியத் திட்டத் தொடக்கத்தில் இந்த முறையீட்டை நான் மத்திய அரசுக்கு வைக்க விரும்புகின்றேன்.

நாம் தருகின்ற 400 ரூபாயில் 200 ரூபாய் நம்முடைய பணமும் 200 ரூபாய் மத்திய சர்க்கார் பணமும் இருக்கின்றது. அந்த மொத்தம் 400 ரூபாயையும் மத்திய அரசே தருகின்ற வகையில் இருந்தால் இன்னும் நலமாக இருக்கும். நம்முடைய பொருளாதார வசதிக்கும் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டில் நாம் நிறைவேற்றுகின்ற பல நல்ல திட்டங்களை எல்லாம் மத்திய அரசு ஆதரித்து, வரவேற்று பாராட்டி அவர்களே இந்தத் திட்டங்களை கையிலே எடுத்துக் கொண்டு இன்றைக்கு மக்களுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டிலே 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தை இப்போது 400 ரூபாய் அளவிற்கு நாம் உயர்த்தியிருக்கின்றோம். இதற்கு வழிவகுத்த நம்முடைய இந்தியப் பேரரசுக்கு இந்த நாளில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்து இந்திரா காந்தி அவர்களுடைய பிறந்த நாளைப் போற்றுகின்ற நாளில் அவர்கள் விரும்பிய இந்தியாவை நிர்மாணிப்போம் என்ற உறுதியோடு விடைபெற்றுக் கொள்கிறேன். ✶

## முதியோர் உதவித்தொகைத் திட்டம்

சமூகநலத் துறையினைச் சார்ந்த முதியோர் உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் உதவித்தொகைத் திட்டம், ஆதரவற்ற விதவை உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள் உதவித்தொகைத் திட்டம், மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் உதவித் தொகைத் திட்டம் ஆகிய திட்டங்கள் வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 65 வயது பூர்த்தியடைந்த ஆதரவற்ற நிலையில் உள்ள அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை கருத்தில் கொண்டு மைய அரசு கடந்த 1995–ஆம் ஆண்டு தேசிய முதியோர் உதவித் தொகைத் திட்டத்தினை அறிமுகம் செய்து தனது பங்களிப்பாக ரூ.75/– வழங்கியது. மைய அரசின் உதவியோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2006–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், மைய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் முதியோர் உதவித் தொகை மற்றும் அதனைச் சார்ந்த நான்கு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த ரூ.200/–ஐ ரூ.400/– ஆக 1.8.2006 முதல் உயர்த்தி வழங்கிட உத்திரவிட்டார்கள். 65 வயது நிறைவடைந்த ஆதரவற்ற முதியோர் மட்டுமே உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தற்போது தளர்த்தப்பட்டு 65 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் முதியோர் உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டிருப்பது, சிறப்பம்சமாகும்.

# மருத்துவத் துறையில் மகத்தான சாதனைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
விளக்கம்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மருத்துவத் துறையில் எந்தவிதமான முன்னேற்றமும் செய்யப்படவில்லை என்றும், தேர்தல் அறிக்கையிலே கூறியதைக் கூடச் செய்யவில்லை என்றும், அரசு மெத்தனமாக நடந்து வருகிறது என்றும் கூறப்பட்ட தகவல்கள் குறித்து அரசுத் துறையின் சார்பில் தரப்பட்டுள்ள விளக்கங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக எழுதுகிறேன்.

2006–இல் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,862 மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருந்தன. அதற்குப் பின் ஏற்பட்ட காலிப் பணியிடங்களையும் சேர்த்து இந்த ஒன்றரையாண்டில் இதுவரை 3,000 மருத்துவர்கள், தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,405 மருத்துவர்கள் நவம்பர் 2006 முதல் கால முறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதேபோல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 2,540 செவிலியர்கள், 419 மருந்தாளு நர்கள், 280 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த மருத்துவம் சாரா மற்றும் அடிப்படை பணியாளர்கள் 10,000 காலிப் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டில் 2,400 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது 1,000 செவிலியர்களுக்கு நியமன ஆணை தயாராக உள்ளது. இவர்கள் விரைவில் பணியில் சேருவார்கள்.

தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பல் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். 155 இந்திய முறை மருத்துவர்கள் (சித்தா மற்றும் யுனானி) தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளனர். இதற்கான தேர்வு முடிந்து, நேர்காணல் நடைபெற உள்ளது. 9 ஓமியோபதி மருத்துவர்கள் மற்றும் 10 யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

பல ஆண்டுகளாக நகராட்சிகளில் சுகாதார அலுவலர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்தனர். தற்போது தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 31 சுகாதார அலுவலர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1992–93இல் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்து நியமனம் செய்யப்படாமல் இருந்த 600 நபர்கள் மற்றும் காந்தி கிராமம் மற்றும் பாண்டிச்சேரி பல்கலைக்கழகங்களில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்தவர்களையும் சேர்த்து, இதுவரை 800 நபர்கள் தற்போது சுகாதார ஆய்வாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிராம சுகாதார செவிலியர் பயிற்சி முடித்த 1,100 அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கிராம சுகாதார செவிலியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கிராம மற்றும் நகர்ப்புற மக்கள், தொற்று மற்றும் தொற்றாத நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மேல் சிகிச்சை அளிக்கும் பொருட்டு கொண்டுவரப்பட்ட மகத்தான திட்டம் "வருமுன் காப்போம்" திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 2006–2007 மற்றும் 2007–2008ஆம் ஆண்டுகளில் 9,000 முகாம்கள் நடத்த ஆணையிடப்பட்டு, இதுவரை 4,491 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களினால் பயனடைந்தோரின் எண்ணிக்கை 47,26,944 ஆகும்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியக்கும் வண்ணம் கருவிலே இருக்கும் குழந்தைக்கும் உணவு அளிக்கும் உன்னதத் திட்டமாக, ஏழை கர்ப்பிணிகள் பயன்பெறும் வகையில் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்" மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் 6,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2006–2007ஆம் ஆண்டில் 2,41,095 கர்ப்பிணிப் பெண்களுக்கு 100 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த நடப்பாண்டில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 2,48,908 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 118.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் 2006 வரை 180 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டம் மேலும் 820 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்போது 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்படுகிறது. இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் பிரசவங்கள் பெருமளவில் உயர்ந்துள்ளன. தனியார் மருத்துவமனைகளில் நடந்துவந்த பிரசவங்களின் எண்ணிக்கையும், வீட்டிலேயே நடந்த பிரசவங்களின் எண்ணிக்கையும் குறைந்து தற்போது அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நிகழும் பிரசவங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன. நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 87,881 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 44,000 பிரசவங்கள் அதிகம் நிகழ்ந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 98.7 சதவிகித பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

31 கோடி ரூபாய் செலவில், 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த இடங்களில் கூடுதல் கட்டடப் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் 5 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். ஏற்கெனவே உள்ள 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக 85 மருத்துவர்களும் மற்றும் மருத்துவம் சாராத பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 100 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு மருத்துவர், செவிலியர் மற்றும் ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2006–2007ஆம் ஆண்டில் மட்டும், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், செமி ஆட்டோ அனலைசர், லித்தோடிரிப்ஸி, 64 ஸ்லைஸ் சி.டி. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவ உபகரணங்கள் சுமார் 83 கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் சேலம் மருத்துவமனைகளுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2006க்கு முன்னர் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இரண்டு கல்லூரி மருத்துவமனையில்

மட்டுமே இருந்தன. தற்போது இந்தக் கருவி மேலும் 7 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு வருகிறது. 64 ஸ்லைஸ் சி.டி.ஸ்கேன் மற்றும் லித்தோடிரிப்ஸி கருவிகள் 2006 க்கு முன்னர் எந்த மருத்துவமனையிலும் இல்லை. தற்பொழுது இந்த நவீன மருத்துவக் கருவிகள் சென்னை மருத்துவக் கல்லூரிக்கும், மதுரை இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் 2006 மே மாதத்திற்குப் பிறகுதான் மாவட்டங்களில் 35 மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 227 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் கட்டடங்கள் கட்ட 220 கோடி ரூபாயும், இந்தக் கட்டடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க 30 கோடி ரூபாயும், கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்ய 21.27 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 271 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் கட்டுவதற்கு பொதுப்பணித் துறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரியுள்ளது.

மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். அவைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு தேவைப்படும் கட்டடங்கள், உபகரணங்கள், பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவைகளை ஆய்ந்து அரசுக்கு வழங்கும் பொருட்டு ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வர் திரு. கணேசன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை காத்திராமல், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டு முதல் கட்டமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப்பணி தொடங்கப்பட உள்ளது. மேலும் செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தலா 25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மதுரை இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கப் பணிகளுக்காக 22 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகள் கட்ட 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அவசர கால ஊர்திகள் வட்டாரம் ஒன்றிற்கு ஒரு ஊர்தி வீதம் 187 வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டு அவைகள் உபயோகத்தில் உள்ளன. எஞ்சிய 198 வட்டாரங்களுக்கும் அவசர கால ஊர்திகள் வழங்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டு கொள்முதல் செய்யும் நிலையில் உள்ளது. இந்த ஊர்திகள் அனைத்தும் விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த ஊர்திகள் தன்னார்வ நிறுவனங்களால் இயக்கப்பட்டு, கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளிகளை குறைந்த செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

பேறு காலத்தில் ஏற்படும் சிசு மரணம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் மரணம் ஆகியவற்றை குறைப்பதற்காக 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால தாய் சேய் நல மையங்கள் 66 மருத்துவமனைகளில் துவக்கி வைக்கப்பட்டு செயல்படாமல் இருந்து வந்தன. இந்த மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 200 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் மேலும் 32 அரசு மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டடப்பணிகள் தொடங்க 41 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டடப்பணி விரைவில் தொடங்கப்படும். திருவாரூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1,419 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் மற்றும் 270 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவ மனைகளில் “மருத்துவப் பயனாளிகள் நலச்

**" இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியக்கும் வண்ணம் கருவிலே இருக்கும் குழந்தைக்கும் உணவு அளிக்கும் உன்னதத் திட்டமாக, ஏழை கர்ப்பிணிகள் பயன்பெறும் வகையில் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்" மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. "**

சங்கங்கள்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவ மனைகளிலும் சேவையை மேம்படுத்த ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள சங்கங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கப் பட்டுள்ளது.

12,619 கிராம சுகாதார மற்றும் குடிநீர் தூய்மைக் குழு அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் கிராமங்களில் சுகாதார நடவடிக்கை மேற்கொள்ள 12.619 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டோர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டது. கருவுற்ற தாய்மார்களில் எச்.ஐ.வி.யால் பாதித்தோர் 1.13 சதவிகிதமாக கண்டறியப்பட்டது. இந்த அரசு எடுத்த தடுப்புப் பணிகள், மருத்துவ சிகிச்சைப் பணிகள் போன்ற முயற்சிகளால் 2006இல் பாதிக்கப்பட்டோர் சதவிகிதம் 0.38 ஆக குறைக்கப்பட்டது. நாட்டிலேயே எச்.ஐ.வி. பாதித்தோரின் எண்ணிக்கையை குறைத்தது தமிழ்நாட்டில் மட்டும்தான்.

சென்னை குழந்தைகள் நல மருத்துவ மனையில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும், இராயப்பேட்டை மருத்துவமனையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும், வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் மாநில பொதுப் பணித்துறையால் தயாரிக்கப்பட்டு நிருவாக ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரிசோதனை சேவை கிடைப்பதற்கு 10 நடமாடும் பரிசோதனை வாகனங்களும், இரண்டு நடமாடும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு வாகனங்களும் வழங்கப் பட்டுள்ளன.

பூச்சிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களி லிருந்து மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆய்வகப் பரிசோதனை முடிவுகளின் அடிப் படையில் தீவிர சிகிச்சை வசதிகள், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மருந்துகள் குறித்து தகவல் அறியவும், அவற்றின் விலை சரிதானா என்பதை உறுதி செய்து கொள்ளவும், தரம் பற்றி தெரிந்து கொள்ளவும் ஏதுவாக மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம் ஒன்று பொது மக்கள் நலன் கருதி தொடங்கப்படவுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து இந்த அரசு மெத்தனமாக நடைபெறவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். அண்மையில் கூட கடந்த மாதம் சேலத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டெல்லியில் உள்ள All India Institute of Medical Sciences மருத்துவமனையைப் போல அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவ மனையாக அங்கேயுள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சியில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி அன்புமணி ஈடுபட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு நானே சென்று கலந்துகொண்டேன். மூன்றாண்டு கால முயற்சிகளுக்குப் பின்னர் தான் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற கால தாமதம் அரசுத் துறைகளில் ஒன்றிரண்டில் ஏற்படுகின்றதென்றால், அதற்கான காரணம் நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளும், தவறுகள் எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதில் காட்டப்படும் அக்கறையும் தான். எனவே அரசு மெத்தனமாக செயல்படுகிறது என்றெல்லாம் ஒட்டுமொத்தமான முடிவுக்கு வந்துவிடக் கூடாது. ★



# மலேசியத் தமிழர்களின் துயரத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
எழுதிய கடிதம்

கோலாலம்பூரில், 25.11.2007 அன்று தமிழர்கள் மலேசிய அரசின் காவல்துறையால் நடத்தப்பட்ட விதம் குறித்து நான் மிகவும் வருத்தம் அடைந்துள்ளேன்.

மலேசியாவில் சிறுபான்மை இந்திய வம்சாவழியினர் ஒதுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழர்கள் பேரணி நடத்தியுள்ளனர். மலேசியாவிலுள்ள இந்திய வம்சாவழி சிறுபான்மையினரில் தமிழர்கள் மிகப் பெரும் சதவிகிதத்தில் உள்ளனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் மகாத்மா காந்தியின் பெரிய படங்களை ஏந்திச் சென்றுள்ளனர். சம உரிமைகளுக்காக இந்தப் பேரணி நடத்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை ஒடுக்குவதற்கும், பேரணியைக் கலைப்பதற்கும் மலேசிய காவல் துறையினர் நீர்ப்பீய்ச்சி இயந்திரங்களையும், கண்ணீர்ப் புகையையும் பயன்படுத்தியுள்ளனர்.

அதுவுமின்றி அவர்கள் 250 இந்திய வம்சாவழியினரையும் கைது செய்துள்ளனர்.

கோலாலம்பூரில் நடந்துள்ள நிகழ்ச்சிகளால் தமிழக மக்கள் கவலை அடைந்துள்ளனர். மிக நீண்ட காலமாக மலேசியாவில் வாழும் தமிழர்கள் மோசமாக நடத்தப்பட்டு வருவது குறித்து தமிழர்களின் கவலையையும், அக்கறையையும் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மலேசியத் தமிழர்களின் துயரத்தையும், அவர்கள் மோசமாக நடத்தப்படுவதையும் முடிவுக்குக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★




# காவல்துறையின் நற்பணிகளுக்குத் தேவையான சாதனங்களை வழங்குவதற்கு எல்லோரும் முன் வர வேண்டும்

காவல்துறையினருக்கு
டி.வி.எஸ். நிறுவனத்தின் சார்பில்
100 இருசக்கர வாகனங்கள்
வழங்கிய விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை
(3.12.2007)

நான் அன்போடும் பாசத்தோடும் செல்லமாக அழைக்கிற வேணு அவர்கள் இந்த அரசின் காவல் துறைக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்பதற்காக 100 இருசக்கர வண்டிகளை வழங்கியிருக்கின்றார்கள். அவர் என்னை இங்கே வரவேற்றபோது எவ்வளவோ வேலைகளுக்கிடையே இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி என்று சொன்னார். இதுபோல உதவிகளைச் செய்வதாக இருந்தால் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அவைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக நிச்சயமாக வருவேன் என்பதை வேணு அவர்களுக்கு மாத்திரமல்ல; அவருடைய நண்பர்களாக இருக்கின்ற தொழில் அதிபர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு அத்தகைய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள் என்று அவர்களையும் கேட்டுக்கொண்டு வேணு சீனிவாசன் அவர்களுக்கு நன்றியை தமிழக அரசின் சார்பாக, காவல் துறையின் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.




**“இவைகளை பயன்படுத்திக் கொண்டு இங்கே மேலும் பல பயனுள்ள காரியங்களை இப்பொழுதே காவல் துறை அதிகாரிகள் திறம் பட தமிழகத்திலே குறிப்பாக சென்னை மாநகரத்திலே செயலாற்றி வருகின்றார்கள், பணியாற்றி வருகின்றார்கள்”**

ஏற்கெனவே ஹுண்டாய் கம்பெனியின் சார்பாக காவல் துறையினுடைய பயன்பாட்டிற்காக 100 கார்கள் வழங்கப்பட்டன. அந்த நிறுவனத்தின் அதிபரோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது அவரிடத்திலே நான் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அவைகளும் சென்னை மாநகரத்திலே காவல்துறைக்காக பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து வேணு அவர்களிடத்திலே நான் பேசும் போது இதேபோல அரசுக்குத் தேவையான மக்களைச் சார்ந்த உதவிகளை அவர் செய்வதற்கு தயாராக இருக்கக் கூடிய ஒருவர் என்ற முறையில் இதனையும் நான் அவரிடத்தில் சொன்னேன்.

ஏற்கெனவே அவர் சாய்பாபா அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு அவருடைய முயற்சியால் கிருஷ்ணா தண்ணீர் உரிய அளவு வந்து சேர்வதற்கும் அதனுடைய செலவுகளில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கும் சம்மதிக்க வைத்து, அவர் சென்னைக்கு வந்து போன விபரம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்த ஏற்பாட்டிற்கும் மூல காரணமாக இருந்தவர் வேணு சீனிவாசன் என்ற முறையிலும், இன்றைக்கு இந்த 100 இருசக்கர வண்டிகள் பல்வேறு ஆயத்தங்களோடு வண்ண விளக்குகள் இன்னும் அதிலே சவாரி செய்கின்றவர்களுக்கு கடமையை நிறைவேற்றுவதற்கான சாதனங்கள் அத்தனையும் பொருந்திய இருசக்கர வண்டிகள் நமக்குத் தரப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே மேலும் பல பயனுள்ள காரியங்களை இப்பொழுதே காவல்துறை அதிகாரிகள் திறம்பட தமிழகத்திலே குறிப்பாக சென்னை மாநகரத்திலே செயலாற்றி வருகின்றார்கள், பணியாற்றி வருகின்றார்கள். அப்பணி மேலும் சிறக்க இதுபோன்ற நன்கொடைகள் உதவும் என்று நான் கருதுகின்றேன்.

வேணுசீனிவாசன் அவர்களைப் பின்பற்றி காவல் துறைக்கு தேவையான இதுபோன்ற நற்பணிகளுக்குத் தேவையான சாதனங்களை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்று நான் எல்லோரையும் கேட்டுக் கொண்டு உங்கள் அத்தனை பேருடைய சார்பாக வேணு சீனிவாசன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உலக மனித உரிமை நாள் செய்தி



ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 10ஆம் நாள், 'உலக மனித உரிமை நாள்' எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளும், ஆண், பெண் எனும் பால் வேறுபாடுகளுமின்றி நமது அரசியல் அமைப்புச் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன், சமத்துவத்துடன், கண்ணியத்துடன் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தும் நாள் 'உலக மனித உரிமை நாள்'.

இந்நாள் நலிந்தோர்க்கும், மெலிந்தோர்க்கும் பாதுகாப்பு உணர்வை நல்கிடும் நாள்!

வலிமை மிகுதியால் எளியோரை வருத்தி வஞ்சகம் புரிவோரைச் சிந்திக்கச் செய்திடும் நாள்!

இந்நாளில், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்!' எனும் சங்கத் தமிழ்ப் புலவன் தந்த பொதுநோக்குச் சிந்தனையைப் புதுப்பிப்போம்!

*'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
*மாணா செய்யாமை தலை'*

'எவ்வளவிலும், எப்பொழுதும், எவரையும் இழிவுபடுத்தும் செயலை மனத்தால் கூட நினைக்காமல் இருப்பதே முதன்மையான சிறப்பாகும்'.

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளும், அதுதரும் பொருளும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இயல்பாய்க் கிளர்ந்தெழுந்து மனிதனை மனிதனாய் மதிக்கும் மனிதநேயம் வளர்ப்போம் என உறுதியேற்போமாக.



# கொடி நாள் நிதிக்குத் தாராளமாய் நிதி வழங்கி உதவிடுவீர்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் வேண்டுகோள்**



டிசம்பர்த் திங்கள் 7ஆம் நாள் கொடிநாள். நாடு காத்திடும் அரும்பணியில் பீடுடன் கடமையாற்றிடுவோர் நமது படைவீரர்கள். அவர்தம் நலன் பேணிடும் திருப் பணிகளில் பங்கெடுத்திடும் உணர்வை நாட்டு மக்களிடம் வளர்த்திடும் திருநாள் இந்நாள்.

தமிழக மக்கள் வாரி வழங்கும் கொடி நாள் நிதியைப் பயன்படுத்தி, முன்னாள் படை வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் தேவையான பல உதவிகளை ஆற்றி வருகிறோம். உலகப் போரில் பணியாற்றி, வறிய நிலையில் வாடும் முன்னாள் படை வீரர்களுக்கு 700 ரூபாய் வீதமும், அவர்களின் விதவையர்களுக்கு 500 ரூபாய் வீதமும் மாதந்தோறும் நிதியுதவி வழங்குகிறோம்.

தொழுநோய், காசநோய், பக்கவாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும், பார்வை இழந்தோருக்கும் மாதம் 500 ரூபாயும், புற்றுநோயாளிகளுக்கு 700 ரூபாயும், பக்கவாதம் மற்றும் பார்வையற்ற சிறாருக்கு 300 ரூபாயும் மாதந்தோறும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கி வருகிறோம்.

முன்னாள் படை வீரர் குடும்பங்களின் கல்வி வளர்ச்சிக்காக மருத்துவப் பட்டப் படிப்பில் 2 இடங்கள், பல் மருத்துவப் பட்டப் படிப்பில் ஒரு இடம், பி.பார்ம்., பி.எஸ்சி.நர்சிங், பிசியோதெரபி படிப்புகளில் தலா ஓர் இடம், பொறியியல் பட்டப் படிப்பில் 81 இடம், பாலிடெக்னிக் பட்டயப் படிப்பில் 80 இடம், பி.ஏ., பி.எஸ்சி., பட்டப் படிப்புகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் 6 இடங்கள், பி.எட்.இல்



ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியிலும் ஒரு இடம், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 132 இடங்கள், கால்நடை ஆய்வாளர் பயிற்சியில் 5 சதவீத இடங்கள் என கல்விப் பிரிவுகள் அனைத்திலும் இடஒதுக்கீடுகளை வழங்கி முன்னாள் படை வீரர்களும், அவர்களது வாரிசுகளும், வழிவழியாகப் பயன்பெற படிக்கும் வாய்ப்புகளைத் தந்துள்ளோம்.

பள்ளி முதல் கல்லூரி வரை படிப்பு உதவித் தொகையும், முன்னாள் படை வீரர்களுக்கு மறு வேலைவாய்ப்புகளுக்கு வழிவகை செய்வதுடன், அவர்களின் குடும்பத்தாரின் வேலை வாய்ப்புகளுக்கும் உதவும் பல்வேறு பயிற்சிகளை அளிக்கிறோம்.

2006 இல் இந்த அரசு அமைந்த பிறகு, முன்னாள் படை வீரர்களின் குறைகளை உடனுக்குடன் களைந்திட, மாவட்டங்களில் உள்ள முன்னாள் படை வீரர் நல அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்கி அவற்றை முன்னாள் படை வீரர் நல இயக்ககம் மற்றும் முப்படைகளின் ஆவணக் காப்பகங்களுடன் ஒருமுகமாக இணைத்திடும் இணையதள வசதியை ஏற்படுத்தியுள்ளோம்.

முப்படை வீரர்கள், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரை நாடிச் சென்று நலம் காத்திட, வாகனங்கள் இல்லாத 8 மாவட்டங்களுக்கு, 34 இலட்சம் ரூபாயில் 8 வாகனங்கள் வழங்கியுள்ளோம்.

நீண்ட காலமாக காலியாக இருந்த 16 உதவி இயக்குநர் பணியிடங்களையும், 17 நல அமைப்பாளர் பணியிடங்களையும் நிரப்பியுள்ளோம். தமிழ்நாடு காவல்துறையில் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற 42 முன்னாள் படை வீரர்களுக்கு நிரந்தர பணி நியமனம் அளித்துள்ளோம்.

2006–07 இல் மட்டும் முன்னாள் படை வீரர் குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் பேருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் 11 கோடி ரூபாய் அளவுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தமிழ் மக்கள் அன்புடன் வாரி வழங்கிய கொடி நாள் நிதியின் துணை கொண்டே நிறைவேற்றப்பட்டுள்ளன.

வரும் ஆண்டுகளிலும் முன்னாள் படை வீரர் குடும்பங்களின் நல வாழ்வையும், வள வாழ்வையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பும், அரும் கடமையும் நமக்குண்டு என்னும் உணர்வோடு, அவற்றை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டின் கொடி நாள் நிதிக்குத் தாராளமாய் நிதி வழங்கி உதவிடுவீர் எனத் தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

**நாடு காத்திடும் படை வீரர்களை நாம் காத்திடுவோம் –**
**கொடி நாளில், நம்மால் இயன்ற வரை நிதியளித்திடுவோம்.**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், தலைமைச் செயலகத்தில் முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். (19.11.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை அவரது இல்லத்தில் டெல் நிறுவனத்தின் உலகளாவிய வசதிகள் துறை முதுநிலை துணைத் தலைவர் திரு.கிப் தாம்ஸன் சந்தித்துப் பேசினர். (3.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற காவல்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், புது டில்லி திகார் சிறையில், தமிழ்நாட்டின் சிறப்புக் காவல் படையை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதற்காக புதுடெல்லி மாநில அரசு அளித்த ரூபாய் 22 கோடிக்கான காசோலையை தமிழகக் காவல்துறை இயக்குநர் திரு. பி. இராஜேந்திரன், இ.கா.ப., அவர்களிடம் வழங்கினார். (22.11.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், தலைமைச்செயலகத்தில் புதியதாக கட்டப்படவுள்ள சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தின் மாதிரி கட்டட வடிவமைப்பை பார்வையிட்டார்.(4.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்,
தலைமைச் செயலகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின்
வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு, புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில்
மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி. **பிரதிபா பட்டீல்** அவர்களால்,
இந்தியாவிலேயே காற்றாலை சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதில்
முதல் மாநிலமாகத் திகழும் தமிழகத்திற்கு வழங்கப்பட்ட கேடயத்தை மாண்புமிகு மின்சாரத்துறை
அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். (1.12.2007)



சென்னையில் மகாகவி பாரதியார் அவர்களின் 126-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட புகைப்படத்திற்கு
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர்
திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர்
ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். (11.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை, 11.12.2007 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் இலக்கியச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சந்தித்தனர். இந்நிகழ்வின்போது மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், கவிப்பேரரசு வைரமுத்து, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் திரு.ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.ம.இராசேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை, 11.12.2007 அன்று அவரது இல்லத்தில் பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் திரு. சுக்காதியா தோரட் அவர்கள் தனது துணைவியார் திருமதி. விமல் தோரட் அவர்களுடன் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள்
புதுடெல்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு நாள் விழாவினை பார்வையிட்டார். தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. கம்பம் செல்வேந்திரன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (18.11.2007)




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள்
சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், தென் இந்திய உணவகங்களின் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய, தமிழகத்தில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை செயலர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர் டாக்டர். எம்.இராசாராம், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (24.11.2007)

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் தமிழகத்தில் வியப்பூட்டும் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு 13.5.2006 அன்று பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மிகச் சிறப்பான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

❖ இந்த அரசு பதவியேற்றபோது ஆரம்ப சுகாதார நிலையங்களில் 800 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. இவ்வரசு மேற்கொண்ட இடையறாத முயற்சிகளின் விளைவால் கடந்த 15 மாத காலத்தில் மருத்துவர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு, இன்று 315 மருத்துவர் பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. மேலும், கூடுதலாக 85 சிறப்பு மருத்துவர்களும், 100 நடமாடும் மருத்துவக் குழுவிற்கான மருத்துவர்களும் இந்த அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ அதேபோன்று, முன்னர் 3,081ஆக இருந்த ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஒப்பளிப்பு எண்ணிக்கை தற்போது 3,266 ஆக உயர்ந்துள்ளது.

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் பணி நியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டு, வரலாறு காணாத அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் நியமனங்கள், மருத்துவ உதவிப்பணியாளர் நியமனங்கள் நடைபெற்றுள்ளன. 780 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா 3 செவிலியர்கள் வீதம் 2,340 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 220 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 660 செவிலியர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ இதேபோன்று மருந்தாளுநர் காலிப்பணியிடங்கள் நிரப்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதில் 50 மருந்தாளுநர் பணியிடங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரப்பப்பட்டுள்ளன. 19 துப்புரவுப் பணியாளர்கள், 17 துப்புரவாளர்கள், 13 ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

❖ 2006ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய) 45,950 பிரசவங்கள் முன்னர் நடைபெற்றன. தற்போது மருத்துவ காலிப்பணியிடங்களை, செவிலியர் உட்பட மருத்துவம் சார்ந்த பணியிடங்களை நிரப்பப்பட்டதன் விளைவாக, 24 மணிநேர பிரசவ சேவை மேம்படுத்தப்பட்டு 2007ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய) 71,450 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த ஆண்டை விட 25,500 பிரசவங்கள் கூடுதலாக நடைபெற்றுள்ளன. 56 விழுக்காடு சாதனை எட்டப்பட்டுள்ளது.

❖ வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பேறுகால அவசர

சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையங்களாக மேம்படுத்தி, 24 மணி நேர சேவை வழங்கிட ரூ.54.97 கோடி செலவிடப்பட்டு வருகிறது.

- ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக எளிதில் தகவல் பரிமாற்றம் நடைபெற ஏதுவாக 385 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஆரம்ப சுகாதார நிலைய அளவிலான முழுத் தகவல்கள் சேகரிப்பது எளிதாகி வருகின்றது.

- துல்லியமான ஆய்வகப் பரிசோதனை வசதிகள் கிராமப்புற மக்களுக்குக் கிடைத்திட முதற்கட்டமாக 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைசர் என்ற நவீன ஆய்வகப் பரிசோதனைக் கருவிகள் ரூ.5.16 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பெருவாரியான கிராம மக்கள் பயனடையக்கூடிய வகையில் இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவு, சர்க்கரை அளவு மற்றும் சிறுநீரகம், கல்லீரல் முதலான உறுப்புகளின் செயல்பாடுகளை துல்லியமாகக் கண்டறிய இந்த செமி ஆட்டோ அனலைசர்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. மேலும், 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இச்சாதனங்களை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- கர்ப்பிணிப் பெண்களின் குறைபாடுகளைக் கண்டறிய ஏதுவாக 237 அல்ட்ரா சோனாகிராம் கருவிகள் ரூ.7.11 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- மிக தொலைவில் உள்ள கிராமங்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் மாதந்தோறும் அங்கேயே சென்று நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளித்திட, கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணம் 100 வட்டாரங்களில் நடமாடும் தாய்சேய் நல மருத்துவக் குழுக்கள் ஆம்புலன்ஸ் வசதியுடன் ரூ.12.88 கோடி செலவில் வாங்கி வழங்கப்பட உள்ளது. வருகிற ஜனவரி 2008 முதல் வாரத்தில் இவை வழங்கப்படும். இதற்கென பிரத்யேகமாக மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவிப்பணியாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் தாய்சேய் நலப்பணிகள் மட்டுமின்றி அவசரகாலப் பணிகள் மற்றும் கொள்ளைநோய் தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

- தமிழகத்தில் உள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தலா ஒரு இலட்சம் அரசு நிதி உதவி வழங்கி 1,417 ஆரம்ப சுகாதார நிலைய பயனாளிகள் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்புடன் கூடிய இந்த நலச்சங்கங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மேம்பாட்டிற்கான சேவை அமைப்புகளாக செயல்பட்டு வருகின்றன. இதன் பயனாக சிறு சிறு பழுதுபார்ப்புப் பணிகள், கருவிகள் பராமரிப்பு, அவசர அவசிய கருவிகள் வாங்குதல் முதலான பணிகள் இந்த சங்கங்களால் தேவைக்கேற்ப மேற்கொள்ள முடிகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இத்திட்டத்திற்கென ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, சிறப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் கர்ப்பகால சர்க்கரை நோயைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனை சிகிச்சைத் திட்டம் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 8.3.2007 முதல் நடைபெற்று வருகின்றன. கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயால் தாய்க்கும், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படுவதை உணர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கருகலைதல், குறைப்பிரசவம், குழந்தை அளவுக்கதிகமாக வளர்ந்து பிரசவத்தில் சிக்கல், ஊனத்துடன் குழந்தை பிறத்தல் போன்ற குறைபாடுகளை இத்திட்டத்தின் வாயிலாகக் களைந்திட முடிகிறது.

- பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களின் முதன்மையானது கர்ப்பப்பை புற்றுநோய் ஆகும். ஆரம்ப நிலையில் இதனைக் கண்டறிந்து அதற்கான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக கர்ப்பவாய் புற்றுநோய் கண்டறியும் திட்டம் ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டு வருகின்றது. இதன்படி முதற்கட்டமாக தஞ்சாவூர் மற்றும் தேனி ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 30 வயது முதல் 60 வயது வரை உள்ள அனைத்துப் பெண்களுக்கும் கருப்பை வாய்ப்புற்று நோய்க்கான சோதனை நடத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2 ஆண்டுகளில் சுமார் 8 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பரிசோதிக்கப்படுவர். தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த அளவு பெரிய மருத்துவ ஆய்வு இதுவரை நடைபெற்றதில்லை. இந்த சோதனைத் திட்டத்தின் முடிவுகளை ஆய்வு செய்து இத்திட்டம் தமிழகமெங்கும் விரிவுபடுத்தப்படும்.

- பூச்சிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலைய அளவிலும் மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆய்வகப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தீவிர சிகிச்சை வசதிகள், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மக்களை நாடி மருத்துவ சேவையளிக்கும் திட்டங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் கடலூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு ரூ.3 கோடி செலவில் 17 இலட்சம் குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடப் பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- கொசுக்களினால் பரவும் யானைக்கால் நோயை வெகுவாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யானைக்கால் நோய் பாதிப்புள்ள 13 மாவட்டங்களில் டி.இ.சி மாத்திரைகள் வழங்கும் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப் பட உள்ளது.

- சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளங்குழந்தை பராமரிப்புக் கருவிகள் ரூ.1.15 கோடி செலவில் யூனிசெப் நிறுவன உதவியுடன் வாங்கி வழங்கப் பட்டுள்ளன.

- ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 32 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு பல் மருத்துவ சாதனங்கள் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், 71 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- ஆரம்ப சுகாதார நிலைய கர்ப்பிணி உள் நோயாளிகளுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலமாக மூன்று வேளை உணவு வழங்கிட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்து வதற்காகவும், எளிதில் சுகப்பிரசவம் நடைபெறவும் இந்திய மருத்துவ முறை மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழகத்தில் உள்ள 450 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும் இந்திய மருத்துவம் சார்ந்த சித்த மருத்துவப் பிரிவுகளில் பணிபுரிந்து வரும் சித்த மருத்துவர்களுக்கு இந்திய மருத்துவம் சார்ந்த அண்மைக்கால முன்னேற்றங்களை விளக்கும் வகையில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன.

★ ★ ★

# 211 உதவிப் பொறியாளர்கள், 77 தினக்கூலிப் பணியாளர்கள், 35 கருணை அடிப்படையிலான பணியாளர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையில் 2006 இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் பெருமளவில் சாலைப் பணிகளும் பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்பார்வையிடுவதில் உதவிப் பொறியாளர்கள் பெரிதும் துணைபுரிகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு முந்தைய ஆட்சியில் புதிய நியமனங்களுக்கு அரசு தடை விதித்ததால் நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர்கள் யாரும் புதிதாக நியமிக்கப் படவில்லை.

தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, அரசுப் பணிகளில் உள்ள காலியிடங்களை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிய அறிவுரைகளைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் துறையில் காலிப் பணியிடங்களாக

இருந்த 215 உதவிப் பொறியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அதன் பயனாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 215 உதவிப் பொறியாளர்களில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 7.12.2007 அன்று வழங்கினார்.

உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமன ஆணைகள் பெற்றவர்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 38 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 43 பேரும், பிற்படுத்தப் பட்டோர் பிரிவில் 66 பேரும் அடங்குவர். இவர்களில் 63 பேர் பெண்கள்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையில் ஏற்கெனவே 300 சாலைப் பணியாளர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது 35 பதிவுரு எழுத்தர் களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்குரிய நியமன ஆணைகளையும், நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு நிலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்தவர்களின் நீண்டநாள் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்பச் சாலைப் பணியாளர்களாக 51 பேருக்கும், சாலை ஆய்வாளர்களாக 2 பேருக்கும், ஓட்டுநர்களாக 3 பேருக்கும், உதவி வரைவாளர்களாக 21 பேருக்கும் சேர்த்து மொத்தம் 77 பணியாளர்களுக்கு உரிய நியமனங்கள் வழங்கிட அனுமதி அளித்து, அவர்களுக்குரிய பணி நியமன ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோயில் திரு.மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை செயலாளர் திரு.கே.அலாவுதீன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

## படித்த வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை

**பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 150 ரூபாய் என்றும், மேல் நிலை வகுப்பு வரை படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் என்றும், பட்டப் படிப்பு வரை படித்து முடித்து, வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 300 ரூபாய் என்றும் உதவித்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதற்கான நிகழ்ச்சிகள் மாவட்டந் தோறும் நடத்தப்பட்டு, அமைச்சர்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அதற்கான ஆணைகளையும், நிதியையும் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின்படி இதுவரை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 77 கோடியே 99 இலட்சத்து 50 ஆயிரத்து 360 ரூபாய் அரசின் சார்பில் நிதி உதவியாக அளிக்கப் பட்டுள்ளது. இதுவும் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி வருவதற்கு ஒரு சான்றுதான்.**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.**

# சமூக விரோதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இரவு ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த காவல்துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் காவல் துறைப் பணிகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் 22.11.2007 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் பேராசிரியர் க. அன்பழகன், திரு.ஆற்காடு நா.வீராசாமி, திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு.கோ.சி.மணி, திரு. துரைமுருகன், திரு.க.பொன்முடி, திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு.எ.வ.வேலு ஆகியோருடன், தலைமைச்செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திருமதி. எஸ்.மாலதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் மற்றும் அரசுச் செயலாளர்கள் ஆகியோரும். காவல்துறை தலைமை இயக்குநர் திரு.பி.இராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர்கள், சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர், மண்டல துணை காவல்துறை தலைவர்கள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விரிவான விவாதத்திற்குப் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பின்வரும் அறிவுரைகளை காவல்துறையினருக்கு வழங்கினார்.

கூலிப்படையினர் மற்றும் ரவுடிக் கும்பல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களின் செயல்பாடுகளைத் தடுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

காவல் துறையினர் சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் தலையிடக் கூடாது.

சமூக விரோதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் இரவு ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

காவல் நிலையங்களில் விசாரணைக் கைதிகளின் மரணம் எந்தச் சூழ்நிலையிலும் நிகழாவண்ணம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

புறநகர்ப் பகுதிகளில் கொள்ளை, களவு நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் காவல் துறையினர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாலை விபத்துகளையும், உயிரிழப்பு களையும் தடுத்திட, போக்குவரத்து விதிமுறைகளை, வாகன ஓட்டுநர்கள் கட்டாயம் கடைபிடிக்குமாறு காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறைச்சாலைகளில் கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும். கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடத் துணை போகும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தினார்.

# பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் சிறந்த மேனிலைப் பள்ளிகளில் பயில நிதியுதவி வழங்கிடும் புதிய முன்னோடித் திட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்**



தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த திறன்மிக்க மாணவ, மாணவியர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், அவர்களது பெற்றோரின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக அவர்கள் விரும்பும் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து தங்கள் மேல்படிப்பினைத் தொடர இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு, அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 3 மாணவர், 3 மாணவியர், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர், 2 மாணவியர் என ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பேர் வீதம் மொத்தம் 300 மாணவ, மாணவியருக்கு அவரவர் விருப்பத்திற்கேற்ப சிறந்த பள்ளிகளில் சேர்ந்து பயில வாய்ப்பளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமென 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், ஒவ்வொரு மாணவருக்கும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் சேர்ந்து படிக்க ஆண்டொன்றுக்கு கல்விக் கட்டணமாக 8,000 ரூபாயும், பராமரிப்புக்

கட்டணமாக 3,500 ரூபாயும், விடுதிக் கட்டணமாக 15,000 ரூபாயும், சிறப்புப் பயிற்சிக் கட்டணமாக 1,500 ரூபாயும் என மொத்தம் 28,000 ரூபாய் வீதம், இரண்டு ஆண்டுகளுக்கு 56,000 ரூபாய் வீதம் செலவினம் மேற்கொள்ள ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி நடப்பாண்டில் தமிழகம் முழுவதிலும் பதினோராம் வகுப்பில் பயிலும் 300 மாணவ, மாணவியர்களுக்கு 84 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக சென்னை, காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், திருவாரூர், திருச்சி, தேனி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 மாணவ, மாணவியர்க்கு 4 இலட்சத்து 62 ஆயிரத்து 732 ரூபாய் மதிப்புடைய காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, தமிழக அரசு வழங்கும் இந்த உதவித் தொகையைப் பயன்படுத்தி நன்கு பயின்று சிறந்த இளைஞர்களாக உருவெடுத்து நமது தமிழகத்திற்குப் பெருமை தேடித் தருமாறு கூறி தமது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உதவி பெற்ற மாணவ, மாணவியர் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தங்களுக்குப் பெரும்பயன் அளித்து ஊக்கப்படுத்திடும் இந்த அருமையான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் தங்களுடைய நன்றியைத் தெரிவிப்பதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

முன்னதாக, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் மாவட்டங்களில் பணிபுரியும் துறை அலுவலர்கள் அரசுத் திட்டங்களின் பணிகள் மக்களுக்கு விரைந்து கிடைப்பதற்கு உதவும் வகையில் துரிதமாகச் செயலாற்றுவதற்கு ஏதுவாக ஈரோடு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கரூர், கோயம்புத்தூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு மொத்தம் 45 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 10 ஈர்ப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு.ந.வாசுதேவன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் திரு.ஆர்.எஸ்.கண்ணா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

## சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்!

**2006 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் அரசுப் பணிகளில் நிரப்பப்படாமல் உள்ள மூன்று இலட்சம் காலி இடங்களுக்கு பணியாளர்களை நியமிப்போம் என்று அறிவித்தோம். அந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில் ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் 2,28,149 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தமிழகத்திற்கு 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முதலீட்டில் தொழில்களைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழக அரசின் முயற்சியால் செய்து கொள்ளப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகளின் மூலமாகவும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.**

–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

# ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 975 கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வழங்கினார்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், தமிழகம் முழுவதும் காலியாகவுள்ள அரசுப் பணியிடங்களில் 3 இலட்சம் இளைஞர் களுக்கு உடனடி வேலைவாய்ப்புகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, 13.5.2006 அன்று இந்த அரசு அமைந்ததைத் தொடர்ந்து, தமிழக அரசின் பல்வேறு துறைகளிலும் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்புவதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 2 இலட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் புதிதாக நிரந்தர

வேலைவாய்ப்புகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். அதுபோலவே, உயர் கல்வித் துறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பல ஆண்டுகளாகக் காலியாக இருந்த 1,020 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, உயர்கல்வித் தகுதி, பணி அனுபவம், படைப்புத் திறன் முதலிய பல்வேறு தகுதிகளின் அடிப்படையில், 34 வகைப் பாடப்பிரிவுகளில் 975 இளைஞர்கள் முறையாகத் தேர்வு செய்யப்பட்டு, கடந்த 19.11.2007 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விரிவுரையாளர் களாக நியமனம் செய்வதற்கு அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30 இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகளை 2.12.2007 அன்று வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

பணிநியமன ஆணைகளைப் பெற்ற விரிவுரையாளர்கள் பல ஆண்டுகளாகக் காத்திருந்தும் கிடைக்காத அரிய வாய்ப்பு தங்களுக்குத் தற்போது கிடைத்துள்ளது என்றும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் நியமன ஆணைகள் பெற்றமை தங்கள் வாழ்வில் மறக்கவியலா இனிய நிகழ்வாகுமென்றும் கூறி, மகிழ்ச்சியுடனும், பெருமிதத்துடனும் தங்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தினர்.

கல்லூரி ஆசிரியர்கள் தேர்வு நியாயமாகவும், நேர்மையாகவும், நடைபெற்று நியமன ஆணைகள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளமைக்காகத் தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் முனைவர் கே.ஜி.பழனி, தமிழக அரசுக்குப் பாராட்டு தெரிவித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு.கே.கணேசன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * *



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், தலைமைச் செயலகத்தில் தென் மண்டல ராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் நோபுள் தம்புராஜ் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களின் ராணுவ மேஜர் ஜெனரல் ஈப்பன் ஜேக்கப் கோச்சகன் அவர்களும் உள்ளனர்.





## சென்னை மாநகரில்

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்

## வழங்கும் விழா

27.11.2007 கலைவாணர் அரங்கம்







# உங்களுக்காக என்றென்றும் நாங்கள் தொண்டுபுரிவோம்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தபடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 15.9.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதற்கட்டமாக 30,000 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 16.9.2006 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து சமத்துவபுரக் குடியிருப்புகளுக்கும், நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். அதே நாளன்று தமிழகம் முழுவதும் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள். தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 18.11.2007 வரை 23 இலட்சத்து 79 ஆயிரத்து 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு 21 இலட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில் மேலும் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக தமிழக சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவுகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை டிசம்பர் மாதம் முதல் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அதேபோல, ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதேநாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள். 16.11.2007 வரை தமிழகம் முழுவதும் 3 இலட்சத்து ஓர் ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 8 இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டன.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில் நவம்பர் மாதம் 27 ஆம் நாள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி உரையாற்றினார்கள்.

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை

## - கலைவாணர் அரங்கம், சென்னை (27.11.2007)

"சென்னை மாநகரில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் – எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குகின்ற விழா இன்றைக்கு திருவல்லிக்கேணி தொகுதிக்கும், சேப்பாக்கம் தொகுதிக்கும் சேர்த்து - என்னுடைய தொகுதியில் – மன்னிக்கவும் – நம்முடைய தொகுதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டம், தேர்தல் காலத்திலே நம்முடைய தேர்தல் அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு நாம் வெற்றி பெற்றால் நம்முடைய கூட்டணி பெரும்பாலான இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிலே அமருமேயானால், அதன் பிறகு நாங்கள் வாக்களித்தோம் – நீங்கள் அளித்த வாக்குகள் எவ்வளவு உண்மையானதோ, அதைப்போல நாங்கள் அளிக்கின்ற வாக்கும் உண்மையானதாக இருக்கும் – இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் – அந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத இல்லங்களுக்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டு – தேர்தல் முடிந்ததும், நாங்கள் சொன்னபடி உங்கள் அன்பான ஆதரவு எங்களுக்குக் கிட்டி ஆட்சிப் பொறுப்புகள் வந்ததும் – சொன்னதை மறந்துவிடாமல், அதனை ஆக்கப்பூர்வமாகச் செய்து, அதன்



பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்
திருவொற்றியூர் – (திருவள்ளூர் மாவட்டம்)



திரு. ஆற்காடு நா. வீராசாமி
மாண்புமிகு மின்துறை அமைச்சர்
சிதம்பரம் – (கடலூர் மாவட்டம்)



திரு. மு.க.ஸ்டாலின்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
வசவப்புரம் – (தூத்துக்குடி மாவட்டம்)



திரு. கோ.சி.மணி
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்
திருவையாறு – (தஞ்சாவூர் மாவட்டம்)

தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த மண்டபத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

### எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனை

இன்று சென்னையிலே மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் இதேபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை – எரிவாயு இணைப்போடு கூடிய அடுப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதை அறிவித்த போது, எதிர்முனையிலே இருந்த நண்பர்கள் அல்லது கட்சிகளின் தலைவர்கள் அல்லது கட்சிகளின் பேச்சாளர்கள் அல்லது கட்சிகளுக்குரிய நாளேடுகளில் எவ்வளவோ பழிப்பு, இழிவுரை, இவர்களால் முடியுமா? ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி எவ்வளவு தெரியுமா? இதை வாங்கி இவர்கள் அளிப்பார்களா, ஏமாற்றுகிறார்கள் என்று யாரும் இந்தக் கூட்டணிக்கு வாக்களிக்காதீர்கள், வாக்களித்து ஏமாறாதீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஏமாந்தவர்கள் யார் என்று நாட்டிற்கு மிக நன்றாகத் தெரிகிறது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றவர்கள் – அந்தப் பெட்டியை வீட்டிலே வைத்துக் கொண்டு, இதுவரையிலே இல்லாத அளவிற்கு பக்கத்து வீட்டிற்கு ஒலி கேட்கும் அளவிற்கு எழுப்பி, கேட்கிறதா ஒலி? இது தி.மு.கழக ஆட்சியிலே அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி, அவர்கள் தந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் ஒலி என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு பெரும் சாதனையை, நம்முடைய மேயர் இங்கே குறிப்பிட்டதைப் போல – இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை – வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குகின்ற சாதனையை நாம் நிறைவேற்றி வருகிறோம்.

கடந்த 2006–2007 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்தபடி இந்தப் பெட்டிகளை வழங்குகின்ற திட்டம் **15.9.2006** அன்று அறிஞர் அண்ணா பிறந்த நாளில் தொடங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம், படப்பைக்கு அருகிலே உள்ள கரசங்கால் என்ற கிராமத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரத்திலே இது தொடங்கப்பட்டது. எடுத்த எடுப்பிலே தொடங்கப்பட்ட இடமே சமத்துவபுரம். எனவே தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் சமத்துவமாக இலவசமாக இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்பதற்கு அடையாளமாக இந்த நிகழ்ச்சி காஞ்சிபுரம் மாவட்டத்தில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திலே தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக **9** கோடி ரூபாய் செலவில் **30** ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக **685** கோடி ரூபாய் செலவில், 25 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் **15.2.2007** அன்று திருவள்ளூர் மாவட்டம், பம்மதுகுளம் கிராமத்திலே தொடங்கப் பட்டது.

### படிப்படியாகத்தான் வழங்க முடியும்

தமிழகம் முழுவதும் 26.11.2007 வரை 23 இலட்சத்து **56** ஆயிரத்து **242** வண்ணத் தொலைக்காட்சிப்



திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
பெத்தநாயக்கன்பாளையம் – (சேலம் மாவட்டம்)



திரு. துரைமுருகன்
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்
பழையபாளையம் – (வேலூர் மாவட்டம்)

பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டு, இதுவரை 21 இலட்சத்து 9 ஆயிரத்து 273 பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இப்படி வழங்கிக் கொண்டிருக்கும்போதே, எங்களுக்குக் கொடுக்கவில்லை, எங்களுக்குக் கொடுக்கவில்லை என்ற குரல் கேட்கத் தவறவில்லை. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால் ஆறு கோடி மக்கள் இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டில் – இந்த ஆறு கோடி மக்கள் வாழ்கின்ற வீடுகளின் எண்ணிக்கை ஒரு கோடிக்குக் குறையாமல் இருக்கும். சாதாரணமாக ஒரு கோடி வீடுகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒரே நேரத்தில் வழங்கிட முடியாது. படிப்படியாகத் தான், மெல்ல மெல்லத்தான், கட்டம் கட்டமாகத்தான் வழங்க முடியும்.

நான் தொடக்கத்திலே ஒரு விழாவிலே எடுத்துக் கூறியதைப் போல திருமண வீட்டிற்கு எல்லோரையும் அழைத்து – ஆயிரம் பேர் திருமணத்திற்காக வந்திருந்தால் – 500 பேரை முதல் பந்தியிலே உட்கார வைத்து விட்டு, இரண்டாவது பந்திக்கு மீதம் இருக்கிற 500 பேரை, நீங்கள் இரண்டாவது பந்தியிலே சாப்பிடலாம், கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்று கேட்டுக்கொள்வதைப் போலத்தான், தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒரேயடியாக ஒரே நேரத்தில் தயாராக முடியாது.

தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவிலே உள்ள மாநிலங்களில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலே கூட சீனா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து கூட நாங்கள் இந்த ஒப்பந்தங்களைப் பேசி அதுவும் தனிப்பட்ட முறையில் நானோ, அமைச்சர்களோ, எங்களுடைய செயலாளர்களோ பேசி அல்ல – ஒரு குழுவை அமைத்திருக்கிறோம், சட்டமன்றத்திலே உள்ள எல்லா கட்சித் தலைவர் அவர்களுக்கும் – தி.மு.கழகத்தின் தலைவர் என்ற முறையிலே முதலமைச்சராகிய நானும், காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பா.ம.க.வின் தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும், முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் முன்னிலையிலே தான் டெண்டர்களே பிரித்துப் பார்க்கப்படுகிறது. நாங்களே பிரித்துப் பார்த்து, நானோ, தலைமைச் செயலாளரோ, செயலாளர்களோ பிரித்துப் பார்த்து உடனடியாக ஆணை பிறப்பித்து பெட்டிகளை வாங்குவதில்லை. விநியோகிப்பதும் இல்லை. எப்படி விநியோகிக்கிறோம் என்றால் – அந்த ஒப்பந்தப் புள்ளிகளையெல்லாம் பிரித்து, யார் குறைவாகக் கேட்டிருக்கிறார்கள் என்று பார்த்து, குறைந்த விலைக்கு கோரியுள்ள நிறுவனத்தோடு பேசி, மேலும் கொஞ்சம் குறைத்துக் கொடுக்கலாமே என்று கேட்டு, குறைத்துக் கொடுத்தாலும், அதையும் எல்லோருக்கும் தெரியும்படியாக அறிவித்து, அந்தக் குழுவிலே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் அந்த ஆணையைப் பெற்றுக் கொண்டு, பின்னர் குறிப்பிட்ட தேதியில் சொன்னபடி பெட்டிகளை அனுப்பி வைக்கிறார்கள். அப்படி கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கின்ற இந்தப் பெட்டிகள் உங்களுக்கு அவ்வப்போது வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுவதில் எந்தத் தவறு இருந்தாலும், யார் சுட்டிக்காட்டினாலும் உடனே அந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன்படி நம்முடைய அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.



முனைவர் க. பொன்முடி
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
திருவெண்ணெய்நல்லூர் – (விழுப்புரம் மாவட்டம்)



திரு. கே.என்.நேரு
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
வளநாடு – (திருச்சி மாவட்டம்)

## தொடர்ந்து வழங்கப்படும்

இதிலே எந்த தவறும் ஏற்படுவதற்கு இம்மியும் இடமில்லை. கிராமங்களில் சொல்வார்கள், "லவலேசமும்" இதிலே குறையில்லை. யாரும் தவறு செய்ய முடியாது. அந்த அளவிற்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்றைக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்ந்து வழங்கப்படும்.

இரண்டாவது கட்டமாக முடிவு செய்யப்பட்ட 25 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் விரைவில் நிறைவுறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில், மேலும் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதற்காக தமிழகச் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் படி அவையும் இப்போது கொள்முதல் செய்யப்படுகின்றது. அவைகள் வரவர தேதி நிர்ணயிக்கப்பட்டு, நம்முடைய அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் அந்தந்தப் பகுதிகளிலே வழங்கப்பட்டு – அப்படி வழங்கப்படும்போது, ஒவ்வொரு ஊரிலும், கிராமங்களாக இருந்தாலும், நகர்ப்புறப் பகுதிகளாக இருந்தாலும் அங்கெல்லாம் வழங்கப்பட – அதற்கும் ஒரு குழு, உள்ளூர் குழு, அதிலும் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் இடம் பெறச் செய்து அவர்கள் மூலமாக இதனை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இது மிகவும் முக்கியமான அவசியமான மக்கள் விரும்பக் கூடிய இப்படியும் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற கேள்வி எழுப்பி – முடியாது என்று அவர்களே பதில் சொல்லி, முடிகிறது பார் என்று நாம் இன்றைக்கு அவர்களுக்கு அறைகூவல் விட்டு நிறைவேற்றுகின்ற திட்டம்தான் இந்தத் திட்டம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லது தோழமைக் கட்சிகள் எல்லாம் ஆதரிக்கின்ற இந்த ஆட்சி – இந்தக் காரியத்தை இன்றைக்குச் செய்கிறதென்றால், ஏதோ தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொடுத்து, அதிலே வருகின்ற கதைகளை, கட்டுரைகளை, அதிலே வருகின்ற உரையாடல்களை, பாடல்களை ஆடல்களை பாருங்கள் என்பதற்காக அல்ல, நாட்டு நடப்பையும் தெரிந்துகொள்ள இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுகிறது. விஞ்ஞானத்தில் இதுபோன்ற சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்கிற அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இந்தச் சாதனங்களின் வாயிலாக உலக செய்திகளை அறிந்து கொள்ளவும், நம்முடைய நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளவும், நம்முடைய வாழ்க்கை முறை எப்படி அமைய வேண்டும் என்ற விஞ்ஞான கருத்துக்களை, நல்வாழ்வுக் கருத்துக்களை புரிந்துகொள்ளவும் இந்தத் தொலைக்காட்சி பயன்படுகிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, நாங்கள் எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். நிறைவேற்றாமல் இருந்தால், கலைவாணர் அரங்கத்திற்கு நாங்கள் இத்தகைய வரவேற்போடு வர முடியாது. நீங்கள் எங்களை இவ்வளவு மகிழ்ச்சியாக வரவேற்றிருக்க மாட்டீர்கள். எங்களைப் பார்த்தவுடன் முகங்களை சுளித்துக் கொண்டிருப்பீர்கள். நாங்களும் எப்படி உங்கள் முகங்களில் விழிப்பது என்ற



திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
குளத்தூர் – (பெரம்பலூர் மாவட்டம்)



திரு. பரிதி இளம்வழுதி
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்
நெடுங்கூர் – (கரூர் மாவட்டம்)

எண்ணத்தோடுதான் வந்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் நீங்களும் எங்களை வெற்றி பெற வைத்தீர்கள், நாங்களும் உங்களை ஏமாற்றவில்லை, ஏமாற்றமாட்டோம், என்றைக்கும் உங்களை ஏமாற்றமாட்டோம், உங்களுக்காக என்றென்றும் நாங்கள் தொண்டுபுரிவோம், அதற்கு அடையாளம்தான் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற எங்களுடைய அந்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்று கூறி, இந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், அடுப்புகளையும் வழங்குகின்ற நிகழ்ச்சியை நான் தொடங்கி வைக்கிறேன். இவைகளைப் பெற்று மகிழ்ச்சியுற்று இந்த அரசுக்குத் தொடர்ந்து நீங்கள் உங்களுடைய ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்". இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

அதே நாளில் (27.11.2007) தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் வழங்கினார்கள்.



திரு. பொங்கலூர் என்.பழனிச்சாமி
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
சின்னவேடம்பட்டி – (கோவை மாவட்டம்)





திரு. இ.பெரியசாமி
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்
மணலூர் – (திண்டுக்கல் மாவட்டம்)



திரு. சுரேஷ்ராஜன்
மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர்
நுள்ளிவிளை – (கன்னியாகுமரி மாவட்டம்)



திரு. எ.வ.வேலு
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்
வேட்டவலம் – (திருவண்ணாமலை மாவட்டம்)



திரு. சுப.தங்கவேலன்
மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர்
கோரவள்ளி – (இராமநாதபுரம் மாவட்டம்)



திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்
முத்தாண்டிபுரம் – (விருதுநகர் மாவட்டம்)



திரு. தா.மோ. அன்பரசன்
மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
பல்லாவரம் – (காஞ்சிபுரம் மாவட்டம்)



திரு. கே.ஆர். பெரியகருப்பன்
மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
மித்ராவயல் – (சிவகங்கை மாவட்டம்)



திரு. என்கேகே.பி. ராஜா
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
ஊதியூர் – (ஈரோடு மாவட்டம்)



திரு. தங்கம் தென்னரசு
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
காவேரிப்பட்டணம் – (கிருஷ்ணகிரி மாவட்டம்)



திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
ஆச்சாரஹள்ளி – (தருமபுரி மாவட்டம்)



திரு. டி.பி.எம். மைதீன்கான்
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
கீழவடுகரை – (தேனி மாவட்டம்)



திரு. என். செல்வராஜ்
மாண்புமிகு வனத் துறை அமைச்சர்
பொட்டவெளி – (அரியலூர் மாவட்டம்)



திரு.வெள்ளக்கோயில் மு.பெ.சாமிநாதன்
மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
புங்கனூர் – (நாகப்பட்டினம் மாவட்டம்)



டாக்டர். திருமதி. பூங்கோதை
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்
பிரானூர் – (திருநெல்வேலி மாவட்டம்)



திருமதி. ஆ. தமிழரசி
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்
நெடுமதுரை – (மதுரை மாவட்டம்)



திரு. கே.பி.பி. சாமி
மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்
அறந்தாங்கி – (புதுக்கோட்டை மாவட்டம்)



திரு. உ. மதிவாணன்
மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
கீழ்த்திருப்பாலக்குடி – (திருவாரூர் மாவட்டம்)



திரு. க.இராமச்சந்திரன்
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
பரளியாறு பஞ்சாயத்து – (நீலகிரி மாவட்டம்)



திரு. வி.பி.துரைசாமி
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
ஓ. பட்டுடையான் பாளையம் – (நாமக்கல் மாவட்டம்)

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்புகள்



# மாநில அரசின் சார்பில் நெல்லுக்கு ஊக்கத்தொகை

நெல்லுக்குத் தரப்படுகின்ற விலை போதாது என்றும், அதனை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்றும் விவசாயிகள் சார்பில் தொடர்ந்து கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் ஆகியோருடன் விவாதித்தார்.

நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 2006–2007இல் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் ஊக்கத் தொகையுடன் சேர்த்து, மொத்தக் கொள்முதல் விலையாக சாதாரண ரக நெல்லுக்கு 620 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு 650 ரூபாயும் என்று மத்திய அரசு அறிவித்தது.

2007–2008இல் முதல் ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 675 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 645 ரூபாய் வீதமும் ஆதார விலையாக நிர்ணயித்து, மத்திய அரசு ஆணை வெளியிட்டது. ஆனால் 2006–2007இல் ஊக்கத் தொகையாக 40 ரூபாய் வழங்கியதைப் போல, 2007–2008க்கு நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு மேல் ஊக்கத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, ஊக்கத் தொகை வழங்கக் கோரி மத்திய உணவு மற்றும் விவசாயத் துறை அமைச்சருக்கு, மாண்புமிக தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியதன் காரணமாக, மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக ஐம்பது ரூபாய் வழங்கிட முன் வந்தது.

இந்த நிலையில் கோதுமைக்கு குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் என்று ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயித்ததால், நெல் சாகுபடிக்கான செலவு கோதுமை சாகுபடிக்கான செலவை விட அதிகம் என்பதை விளக்கி, நெல் கொள்முதல் விலையையும் உயர்த்திட வேண்டுமென்று தமிழக அரசு சார்பில் மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது.

இதன்பின்னர் தமிழக அரசு வலியுறுத்தியதன் அடிப்படையில் மத்திய அரசு நெல்லுக்கான ஊக்கத் தொகையை ஏற்கெனவே குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று அறிவித்ததற்கு மாறாக, 100 ரூபாய் ஊக்கத் தொகை என்று அறிவித்தது. இதன்படி தற்போது முதல் ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 775 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 745 ரூபாய் வீதமும் விவசாயிகளுக்கு வழங்கி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதன் பின்னரும் நெல்லுக்கான கொள்முதல் விலை போதவில்லை என்ற குறைபாடு விவசாயிகள் சார்பாக தெரிவிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் குவிண்டால் ஒன்றுக்கு மேலும் 50 ரூபாய் ஊக்கத் தொகையாக அளிக்கப்படும் என்று இன்று அறிவித்திருக்கிறார். எனவே தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் முதல் ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 825 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 795 வீதமும் வழங்கப்படும். இதனால் தமிழக அரசுக்கு 82.50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், தமிழ்நாட்டு விவசாயிகள் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த முடிவினை எடுத்திருக்கிறார்கள். ✻

# ஒரு டன் கரும்புக்கு விலை ரூ.1,034

2007 – 2008 அரவைப் பருவத்தில் 9 சதவிகிதம் சர்க்கரைச் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 811.80 என்று மத்திய அரசு குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு – மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச விலையை விடக் கூடுதலாக ரூ.222.20 உயர்த்தி, ஒன்பது சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1,034 என்று நிர்ணயம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.11.2007 அன்று அறிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வு, 1.10.2007 முதல் தொடங்கியுள்ள நடப்புக் கரும்பாண்டில் ஏற்னெவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேலும் 9 சதவிகிதம் சர்க்கரைக் கட்டு மானத்துக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித சர்க்கரைக் கட்டுமானத்துக்கும் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் ஊக்கத் தொகையாக (Incentive) வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

✻ ✻ ✻




# சிறு சிறு கிராமங்களை, பட்டி தொட்டிகளை இணைக்கின்ற வகையில் ரயில்பாதைகள் அமைய வேண்டும்

இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற மகிழத்தக்க இந்த விழாவில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மிகுந்த பெருமையடைகிறேன், பெருமகிழ்ச்சி யடைகிறேன். இந்த விழா என்னால் தான் தாமதப்பட்டுக் கிடக்கிறது என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்து, அந்தச் செய்தி கொடுத்தது நானல்ல என்று நம்முடைய மத்திய இணை அமைச்சர் திரு.வேலு அவர்கள் என்னிடத்திலே நேரடியாக விளக்கம் தந்து, பத்திரிகைகளிலே இப்படியெல்லாம் வரும், விழா நடக்கும் நடக்காது அல்லது தாமதமாகும் என்றெல்லாம் வரும் என்றாலுங்கூட, நாங்கள் இணைந்து நடத்துகின்ற எந்த




19.11.2007 அன்று திருவான்மியூர் - வேளச்சேரி இடையே ரயில் சேவையைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை




நிகழ்ச்சியானாலும் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்தே தீரும், அளிக்கப்பட்ட உறுதி காப்பாற்றப்பட்டே தீரும் என்பதற்கு இங்கே நடைபெறுகின்ற இந்த விழாவும் ஒரு சான்று.

தம்பி டி.ஆர்.பாலு அவர்களுக்கு என்னுடைய ஊர் பெயர்கூட மறந்து விட்டது. அவர் வேலு அவர்களிடம் சிபாரிசு செய்யும்போது, திருவாரூர் ரயில் தடத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் வேலு அவர்களிடம் ஞாபகப்படுத்தியிருப்பது – நான் பிறந்த ஊரான திருக்குவளைக்கு ஒரு ரயில் தடம் வேண்டுமென்பதுதான். அதற்கான முயற்சிகளில் அவரும் ஈடுபட்டிருக்கிறார், அவர் மாத்திரமல்ல, நம்முடைய லல்லு பிரசாத் யாதவ் அவர்களே அதிலே தனி கவனம் செலுத்தி வருகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் பாலு இங்கே, சின்ன ஊர்கள் எல்லாம் அவருக்கு இப்போது பிடிப்பதில்லை – அதனால் அவர் திருவாரூர் ரயிலுக்காக இங்கே, சிபாரிசு செய்து விட்டு, வந்து என் பக்கத்திலே அமர்ந்திருக்கிறார். அதற்கு தைரியம் வேண்டும்.

**எளிய மக்கள் பயன்படுத்திய ரயில்**

இந்தத் திட்டம், தம்பி பாலு இங்கே குறிப்பிட்டதைப் போல, நீண்ட காலமாக ஆரம்பிக்கப்பட்டு, விரைவிலே முடியும், முடியும், முடியும் என்று ஒவ்வொரு ஆட்சியும் வருகிற நேரத்தில் எல்லாம் எதிர்பார்க்கப்பட்டு, மத்தியிலே உள்ளவர்களுடைய தயக்கத்தாலோ அல்லது வழித் தடம் தருகின்றவர்களுடைய இடையூறுகளாலோ இது முழுமையாக நிறைவேற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இன்றைக்கு இந்த வழித் தடத்திலே வேளச்சேரி வரையிலே இந்த பறக்கும் ரயில் என்ற ஒரு முடிவு எய்தப்பட்டிருக்கிறது.

இன்னும் அதிகமான ரயில் தடங்கள் தமிழ்நாட்டிற்கு தேவை என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன், நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள். போக்குவரத்திற்கு பேருந்துகளை, விமானங்களை நம்பி எதிர்பார்த்து அவைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவைகளையும் பயன்படுத்திக் கொண்டு, அவைகள் மட்டும்தான் போக்குவரத்துச் சாதனங்கள் என்று இல்லாமல் ஆரம்ப காலத்திலே, நமக்கு, நம்முடைய ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள், கிராமப்புறத்து மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்திய எளிய ஒரு வாய்ப்பு ரயில்தான் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

**மேம்பாலங்கள் கட்டும் பணி**

ஒரு ஆட்சிக்கு எல்லா வகையான வசதி வாய்ப்புகள் இருந்தாலும், மக்களிடத்திலே எப்படியெல்லாம் ஒரு ஆட்சி நிறைந்த தொடர்பு கொண்டிருந்ததாக இருந்தாலும், போக்குவரத்து சரியாக இல்லையென்றால், போக்குவரத்திலே இடையூறு ஏற்படுமேயானால் மக்கள் ஆங்காங்கு சலித்துக் கொள்ளும்போது, ஆட்சியைத்தான் மனதிலே நினைத்துக் கொண்டு சலித்துக் கொள்வார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்லுகின்றேன், சென்னையிலே இன்றைக்கு எத்தனையோ இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பிக்கின்ற வகையில் நிலைமை இருக்கிறது. காரணம், இருக்கின்ற சாலைகள் போதவில்லை,




பாலங்கள் போதவில்லை என்பதை நம்மால் உணரமுடிகிறது. அதனால்தான் மாநகராட்சி மன்றத்திலே நம்முடைய பொறுப்பு வரும்போதெல்லாம் மேம்பாலங்கள் கட்டுகின்ற அந்தப் பணியிலே நாம் ஈடுபடுகின்றோம்.

பல மேம்பாலங்கள் சென்னை மாநகரத்திலே கட்டப்பட்டும்கூட ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலும், மேம்பாலங்கள் அமைத்தும்கூட போக்குவரத்து இன்னும் எளிமையாக இல்லை, இலகுவாக இல்லை. அதிலே பல சங்கடங்கள், இடையூறுகள் இருக்கின்றன என்ற நிலையை உணரமுடிகிறது.

என்னதான் வசதி வாய்ப்புகளை மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்தாலும், அரிசியைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு; போகின்ற வழியிலே ஒரு கலர் டி.வி. பெட்டியை இனாமாகப் பெற்றுக்கொண்டு போகின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வீட்டுக்கு உரிய நேரத்திலே போய்ச் சேரமுடியாவிட்டால் வழியிலே போக்குவரத்து இடையூறாக இருந்தால், கையிலே குறைந்த விலைக்கு வாங்கிய அரிசி பை இருந்தாலும், அதிக விலை பெறக்கூடிய டி.வி.பெட்டி – அதுவும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கையிலே இருந்தாலும், அந்தப் போக்குவரத்து இடையூறு காரணமாக இவைகளைக் கொண்டுபோய் வீட்டிலே சேர்த்து குழந்தைக் குட்டிகளோடு மகிழ்ச்சி அடைய முடியவில்லையே; நேரமாகிறதே என்று அவர்கள் பேருந்து ஓட்டுபவர்களை; அவர்களுக்கு வழித்தடம் காண்பிப்பதற்காக வழியிலே குறுக்கே நின்று சைகை காட்டிக் கொண்டிருக்கின்ற காவல் துறை நண்பர்களை மாத்திரமல்ல, இவ்வளவும் செய்கின்ற சர்க்காரையே "என்ன சர்க்காரப்பா, எவ்வளவு நேரமாகிறது" என்று அலுத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு அலுப்பு, சலிப்பு அரசின் மீது வராமல் இருப்பதற்கு நம்முடைய போக்குவரத்துக்கள், வழி நடைப்பாதைகள் எல்லாம் எளிதாக, வசதிமிக்கதாக, வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக இருந்திட வேண்டும்.

**மக்கள்தொகை பெருக்கம்**

அப்படிப்பட்ட நிலை இன்று தமிழகத்திலே மாத்திரமல்ல; இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள அரசுகளால் நம்முடைய நண்பர் வேலு போன்றவர்களுடைய உதவியோடு, முயற்சியோடு, துணையோடு இந்த போக்குவரத்துக்கள் சீர் செய்யப்பட்டாலும்கூட இன்னும் பல தேவைகளை அந்தந்த மாநிலங்கள் மத்திய அரசுக்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஒரு ரயில்வே அமைச்சரை, கப்பல் துறை




அமைச்சரைச் சந்திக்கின்ற நேரத்தில் எங்கள் ஊருக்கு ஒரு ரயில் தேவை என்று சொல்லாமல் இருப்பதில்லை. என்ன காரணம்? எவ்வளவுதான் தேவைக்கு ஏற்ப போக்குவரத்து வசதி செய்து கொடுத்தாலும், மக்கள் தொகையினுடைய பெருக்கம் அளவுக்கு மீறி பெருகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய தேவையையெல்லாம் நிறைவு செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்படுவதற்கு ஒரு அரசு நிதியை அதற்காக ஒதுக்கினாலும், அதற்காக ஆற்ற வேண்டிய ஆக்கப்பணிகளை செய்வதற்கு காலம், நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

இந்தியா இன்றைக்கு சுதந்திர நாடு. 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய போக்குவரத்துக்கள் கிடையாது. இன்றைக்குக் கூட பள்ளிக்கூடத்தில் உள்ள ஆரம்ப பாடப் புத்தகத்திலே அசோக மன்னர் என்ன நன்மைகளைச் செய்தார் நாட்டுக்கு என்றால், சாலைகள் போட்டார், குளங்கள் வெட்டினார் என்றுதான் இன்றைக்கும் பாலபாடத்திலே படிக்கிறோம். காரணம் சாலைகள் அதாவது போக்குவரத்துக்கள் அவ்வளவு அவசியமாக கருதப்பட்டது. அதனால் தான் சாலைகள் போடுவதிலும், அப்படி சாலைகள் போடுகின்ற வழியிலே அவர்களுக்குத் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காகக் குளங்கள் வெட்டுவதிலும், அரசுகள், அரசர்கள் தனி கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருந்தார்கள். இது 300, 400 ஆண்டுகளுக்கு முன்பு.

அப்படிப்பட்ட நேரத்திலேதான் இந்தியாவில் வெள்ளைக்காரன் நுழைந்தான். ஆங்கிலேயர்களுக்கு முன்பு டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள் நுழைந்தாலும் கூட அவர்களைவிட நுழைந்தவர்களிலே கெட்டிக்காரர் களாக இந்தியாவினுடைய நிலைமைகளை அறிந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்பவர்களாக இருந்தவர்கள் ஆங்கிலேய வெள்ளைக்காரர்கள். அதனால்தான் அவர்கள் போக்குவரத்தை முதலில் சீர் செய்தார்கள்.

**தபால், தந்தி, ரயில்**

கிராமங்களில் அந்தக் காலத்தில் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்று பேசப்படும்போது காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களிலே காங்கிரஸ் தியாகிகள் இந்திய சுதந்திரத்தைப் பற்றி பேசும்போது – வெள்ளைக்காரனைத் தாக்கிப் பேசும்போது கிராமங்களில் உள்ள தாய்மார்கள், வயதான பாட்டிகள் என்ன சொல்வார்கள் என்பதை கேட்டிருக்கிறேன்; "ஆமா வெள்ளைக்காரனை விரட்டி விட்டு – அவன் இல்லையென்றால் ரயில் வருமா? அவன் இல்லையென்றால் தந்தி உண்டா? அவன் இல்லையென்றால் தபால் உண்டா?" – இப்படி தபால், தந்தி, ரயில் போன்ற இந்த சாதாரண வசதிகள் என்று இன்றைக்கு கருதப்படுகின்ற இந்த வசதி வாய்ப்புக்கள் அந்தக் காலத்திலே எவ்வளவு பெரிதாகக் கருதப்பட்டது என்பதால்தான் "ரயில் போட்டான் வெள்ளைக்காரன்; தபால் நிலையங்களை உருவாக்கினான் வெள்ளைக்

காரன்; எனவே அவனை ஏன் விரட்ட வேண்டும்?'' என்று பட்டிக்காட்டிலே வாழுகின்ற பாமர மக்கள் பதில் அளித்தார்கள்.

தியாகம் செய்த காங்கிரஸ்காரர்களைப் பார்த்தும்கூட, விடுதலைக்காகப் போராடியவர்களைப் பார்த்தும்கூட கேட்டார்கள். இதற்கு என்ன காரணம் என்றால் மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளிலே ஒன்றாக இருக்கின்ற உணவு, உடை இவைகளோடு சேர்த்து ஒத்த வகையில் எண்ணத்தக்க இந்தப் போக்குவரத்து வசதிகள் ஆளுகின்றவர்களால் இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எண்ணிப்பாருங்கள்! நீலகிரி மலையில் இந்தச் சாலைகள் எல்லாம் போடப்படாமல் – அன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு நீலகிரி மலை எப்படி இருந்தது? கரடு முரடாக எந்தப் பாதையும் இல்லாமல் இருந்தது நீலகிரி மலை. ஏன் நீலகிரிக்குப் போகவேண்டும்? சேலத்திற்கு பக்கத்திலே இருக்கின்ற சின்னஞ்சிறு மலை;

நேர்மையாக நேர்த்தியாக செய்து தர வேண்டும். அப்படி செய்து தரப்படும் பொழுது உள்ள போக்குவரத்துக்களிலே இன்றைக்கு உச்சக்கட்டத்திற்கு வந்திருக்கின்ற போக்குவரத்து; தம்பி டி.ஆர்.பாலு இங்கே சொன்னதைப் போல அது ஆகாய விமானமாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான். அடுத்து கப்பலாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான். அதற்கடுத்து நம்முடைய வேலு நிர்வகிக்கின்ற ரயில்வே இலாக்காவாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான்.

ஆனால் இவைகள் எல்லாம் இந்தியாவினுடைய மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமானதாக அமைந்திருக்கின்றதா என்றால் இல்லை. 100 கோடியைத் தாண்டி இருக்கிறது இந்தியாவினுடைய மக்கள் தொகை. ஆனால் 100 கோடி மக்களுடைய வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப அவர்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்யக்கூடிய அளவிற்குப் போக்குவரத்துத் துறை இருக்கிறதா என்றால் இல்லை. இதை நான் குறையாக – குற்றமாக எந்த ஒரு அரசு மீதும் அல்லது மத்திய அரசு



ஏற்காடு மலை என்று எடுத்துக் கொண்டாலும்கூட அங்கெல்லாம் செல்வதற்கு வழியில்லாமல் நல்ல பாதை இல்லாமல் இருந்த அந்த மலைப்பாங்கான இடங்கள் ஆங்கிலேயருடைய காலத்திலேதான், வெள்ளைக் காரனுடைய காலத்திலேதான் சீர்படுத்தப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு இன்றைக்குத் தார்ச் சாலைகளாக, சிமெண்ட் சாலைகளாக விளங்குகின்ற காட்சிகளை எல்லாம் பார்க்கிறோம்.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அடிப்படை போக்குவரத்துக்கான வசதிகளை ஒரு அரசு

மீதும் சொல்லமாட்டேன், சொல்ல முடியாது; ஏனென்றால் அவர்களும் நம்மால் உருவாக்கப்பட்ட அரசு தான் அவர்களுக்கு என்ன கஷ்டம் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. நானும் ஒரு அரசு பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் எனக்கும் அது புரிகிறது.

**மத்திய, மாநில அரசுகளின் உதவி**

மெல்ல மெல்லத்தான், ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அக்கறையோடு நாம் பாடுபடுகின்ற




காரணத்தினாலேதான் இன்றைய தினம் இந்த போக்குவரத்திலே பிரதானமாக நாம் கருதுகின்ற ரயில்வே துறை மூலம் இன்னும் சிறு சிறு கிராமங்களைக் கூட பட்டிதொட்டிகளைக்கூட இணைக்கின்ற வகையிலே ரயில்வே பாதைகள் அமைய வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அண்மையிலே அதுவும் தமிழகத்திலே இதுபோன்ற காரியங்களைச் செய்யும்போது எவ்வளவு இடையூறுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் சேலத்தில் ஒரு ரயில்வே கோட்டம் அமைக்கும்போது நம்மால் அதை எதிர்பார்க்க முடிந்தது. நாம் அதைச் சமாளிக்க முடிந்தது. அப்படிச் சமாளிப்பதற்கு மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டியிருந்தது. அதற்கு மத்திய அரசின் உதவியும் இருந்தது. மாநில அரசின் உதவியும் இருந்தது. இவ்வளவு உதவிகளை வைத்துக் கொண்டு ஒரு கோட்டத்தை அமைக்கக் கூட நாம் அவ்வளவு கஷ்டத்தை ஏற்கவேண்டியிருந்தது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எந்த ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், அதைத் தமிழ்நாட்டில் செய்வதாக இருந்தாலும், அது தண்ணீராக இருந்தாலும், போக்குவரத்தாக இருந்தாலும், அது ஆறாக இருந்தாலும், நதியாக இருந்தாலும், ஏன் சாதாரண வாய்க்காலாக இருந்தாலும்கூட தமிழ்நாடு மக்களுக்கு அது பயன்படுகிறதென்றால், அதைத் தடுக்க, அதைத் தாமதப்படுத்த, அதிலே தகராறு செய்ய பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் கூட இன்றைக்குத் தவறுவதில்லை. எனவே தான் பல கஷ்டங்களை நாம் சமாளித்து, நம்முடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆறு, வாய்க்கால்களிலே தகராறு வரலாம். ஆனால் ரெயில்வே பாதைகளிலே கூட தகராறுகளை நாம் சமாளித்துத்தான் அதிலிருந்து மீள வேண்டியிருக்கிறது. அப்படி மீண்ட ஒரு நிகழ்ச்சி தான் அண்மையிலே நாம் உருவாக்கிய சேலம் ரயில்வே கோட்டம்.

**சேலம் ரயில்வே கோட்டம்**

எத்தனை நாட்களாக அதைப் பற்றி பேசியிருக்கிறோம் ? சேலம் ரயில்வே கோட்டத்தைப் பற்றி தேவகவுடா பிரதமராக இருந்த காலத்திலேயே – தேவகவுடா அவர்களை உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன் – அவர் பிரதமராக இருந்த போதே சேலம் கோட்டம் வேண்டுமென்று சேலத்திலே ஒரு நிகழ்ச்சியிலே கோரிக்கை வைத்து, அவரும் நிறைவேற்றுவதாகச் சொல்லி விட்டுப் போனார். ஆனால் தேவகவுடா காலத்திலும் நிறைவேறவில்லை. பிறகு யார் யாரோ பிரதமர்களாக வந்தார்கள், நிறைவேறவில்லை. இப்போது நம்முடைய திருமதி. சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலில், திரு. மன்மோகன் சிங் அவர்களுடைய ஆட்சியிலே தான் – நண்பர் வேலு போன்றவர்கள், லல்லு போன்றவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத் தான் சேலம் கோட்டம் இன்றைக்கு வந்திருக்கின்றது.

என்ன ? சேலம் கோட்டம் என்று அடிக்கடி சொல்கிறாரே, அது என்ன வள்ளுவர் கோட்டம் போலவா என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. சேலம் கோட்டம் என்றால் ரயில் பாதை எந்தெந்த ஊர்களை இணைக்கின்றது, எப்படிப்பட்ட செழிப்புள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, எப்படிப்பட்ட

பொருளாதார வசதியுள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, எப்படிப்பட்ட தொழில் வளர்ச்சியுள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, அப்படி இணைப்பதால் எந்தப் பகுதி மக்கள், சாதாரண சாமான்ய பாட்டாளி மக்கள் எந்த அளவிற்குப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவார்கள், கோட்டம் என்பது ஏதோ பெயர் மாத்திரமல்ல, அதனால் விளையும் பயன்களையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கிறோம். அப்படி எண்ணிப் பார்த்துத் தான் சேலம் கோட்டத்திற்காக அந்த அளவிற்கு நாம் போராடி அதைப் பெற்றிருக்கிறோம்.




அதே போல இன்றைக்கு இந்த விஷயம் – வேளச்சேரிக்குப் பறக்கும் ரயில் கொண்டு வருவது சாதாரணமாகத் தெரியலாம். எதுவுமே ஒன்று நடக்கிற வரையிலே பெரிதாகத் தெரியும், நடந்து விட்டால் அது நமக்கே சாதாரணமாகத் தெரியும். அது தான் வந்து விட்டதே என்று நமக்கு சாதாரணமாகத் தெரியும். ஆனால் வந்த இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள நம்முடைய மக்கள் தயாராக இருக்க வேண்டும். அதற்கு நல்ல முறையிலே ஒத்துழைப்புத் தர வேண்டும்.

**ஓட்டுநர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்க வேண்டும்**

இந்தப் பாதையில் ரயில் வேகமாகப் போகும், ஒரு நாளைக்கு 58 முறை போய் வரும் என்றெல்லாம் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கின்றது. ஒரு நாளைக்கு 58 தடவை போனாலோ, 60 தடவை போனாலோ போகின்ற ரயில் ஒழுங்காகப் போக வேண்டும், யார் மீதும் மோதாமல் செல்ல வேண்டும். ஏனென்றால் இப்போது ரெயில்கள் குறைந்து, பேருந்துகள், லாரிகள் சாலைகளிலே அதிகமாகப் போக்குவரத்துக்களுக்குப் பயன்படுத்துகின்ற காரணத்தால் எனக்கே சகிக்காமல் சொல்கிறேன், என்னால் தாங்க முடியாமல் சொல்கிறேன், விபத்துக்கள் அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் விபத்துக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் நாம் பத்திரிகைகளைப் பார்த்தால் அல்லது வானொலியைக் கேட்டால், தொலைக்காட்சிகளைக் கண்டால் ஐம்பது பேர், அறுபது பேர் விபத்துக்களுக்கு ஆளாகி உயிர் விட்டார்கள் என்ற செய்தி வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு யார் காரணம்? வைதீகர்கள் விதி என்று சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். அல்ல, இது விதி அல்ல, நம்முடைய அஜாக்கிரதை. நம்முடைய தவறு. நம்முடைய காரோட்டிகள், பேருந்து ஓட்டுநர்கள், லாரி ஓட்டுநர்களின் அஜாக்கிரதை. இதிலே நூற்றுக்கு தொண்ணூறாவது இவர்களுடைய அஜாக்கிரதையால் நடைபெறுகிறது. எனவே அவர்களுக்கெல்லாம் நல்ல

பயிற்சி அளிக்க வேண்டும். போதுமான பயிற்சி அவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

இரவிலே தூங்கி விட்டு, லாரிகளிலே உட்கார்ந்து கொண்டு தூங்கி விட்டு அல்ல, படுத்துத் தூங்கி விட்டு, பிறகு லாரியை ஓட்ட வேண்டும் என்கிற அளவிற்கு அவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் போகிற உயிர்கள் சாதாரண உயிர்கள் அல்ல. பச்சைக் குழந்தைகள், பாவையர்கள், பெண்கள், பாட்டிமார்கள், தாய்மார்கள், உழவர்கள், பாட்டாளி மக்கள் என்று இப்படி பலபேருடைய உயிர்கள் – அவர்களுடைய உயிர்களைக் குடிக்கின்ற, புராண பாஷையிலே சொல்ல வேண்டுமேயானால், "எமன்"களாக இன்றைக்கு நம்முடைய நாட்டுச் சாலைகளிலே சென்று கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்கும், லாரிகளுக்கும் நாம் ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்தி அவைகள் எல்லாம் ஒழுங்காகச் செல்வதற்கு சட்டம் போட்டு முடியாது, அவைகளை ஓட்டுகின்றவர்கள், அவைகளை நிர்வகிக்கின்றவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு இந்த விபத்துக்களைத் தடுக்க அவர்கள் முன்வரவேண்டும்.

ரெயில்களால் இப்படி விபத்துக்கள் ஏற்படாது. ஏனென்றால் ஒழுங்காக கட்டுப்பாட்டிலே இரண்டு தண்டவாளங்களிலே போய்க் கொண்டிருக்கின்றன. கட்டுப்பாடில்லாமல் போய்க் கொண்டிருக்கின்ற பேருந்துகள், லாரிகள் எல்லாம் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய விபத்துக்களை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கின்றன. அதிலும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எச்சரிக்கையாக இருக்கின்ற அதே நேரத்தில் நாம் போக்குவரத்தில் இன்றைக்கு காவல் புரிகின்ற காவல் துறை நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் லாரிகளை ஓட்டுகின்றவர்கள், பேருந்துகளை ஓட்டுகின்றவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள் தானா? முறையாகப் பயிற்சி பெற்றவர்கள் தானா என்பதை இன்னும் நல்ல முறையிலே ஆராய்ந்து அவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும், அதிலே விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் நான் வலியுறுத்தி இந்த அளவில் உங்களையெல்லாம் இந்த நிகழ்ச்சியிலே சந்திப்பதில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, இந்தப் பறக்கும் ரயில் விரைவிலே கொண்டு வருவதற்கு அரும்பணியாற்றிய அருமை சகோதரர் வேலு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன். ✶

# சொன்னதைச் செய்வோம் செய்ததைச் சொல்வோம்!

**கேள்வி :-** ஆந்திரத்தில் ஏப்ரல் முதல் ரூ.2 க்கு 1 கிலோ அரிசி என்று அந்த மாநில முதல்வர் அறிவித்திருக்கிறாரே?

பதில் :- மகிழ்ச்சி. முதன் முதலில் இந்தியாவிலேயே அந்தத் திட்டத்தை அறிவித்து, நடைமுறைப்படுத்திய மாநிலம் தமிழ்நாடு என்பதில் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆந்திராவிலே மாத்திரமல்ல ; விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள குஜராத் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கையில் அங்கே காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைக்குமேயானால், ஏழைகளுக்கு இலவச ரேஷன் பொருட்கள், கலர் டி.வி. போன்ற ஏராளமான சலுகைகளை வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக தமிழகத்தில் உள்ள தி.மு.கழக ஆட்சி நடைபெறுகிறது.

–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

# இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிட எந்தவிதமான வருமான உச்சவரம்பு கிடையாது



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது உணர்வோடு இரண்டறக் கலந்திட்ட ஈடுஇணையற்ற திட்டமான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் விதம் குறித்து மாண்புமிகு அமைச்சர்கள், அரசுச் செயலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் 14.11.2007 அன்று கலந்தாய்வு நடத்தினார்.

31–7–2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த நிதி ஆண்டு முடிவதற்குள் மூன்று இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று ஒரு வரையறை விதித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அந்தப் பணியில் முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்று முடிவெடுத்து அறிவித்ததைத் தொடர்ந்து, 14.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில்; அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றினார்கள் என்பதை ஆய்வு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர், வருவாய்த் துறைச் செயலாளர், நில நிருவாக ஆணையர் மற்றும் திருச்சி, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோவை விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப் பட்டதில், 10.11.2007 வரை 2 இலட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து இந்தப் பணியினை முழு வேகத்தோடு முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும் அன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட புதிய அறிவிப்புகள் :–

இலவசமாக வீட்டுமனை பெற கிராமப் புறங்களில் ஆண்டு வருமானம் 30 ஆயிரம் ரூபாய் என்றும், நகர்ப்புறங்களில் ஆண்டு வருமானம் 50 ஆயிரம் ரூபாய் என்றும் இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பை முழுவதுமாக நீக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. இனி இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க எந்தவிதமான வருமான உச்சவரம்பும் கிடையாது.

கிராமப்புறங்களில் இதுவரை மூன்று சென்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் ஒன்றரை சென்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு சென்ட் வரையிலும் வருமான வரம்புக்குட்பட்டு, இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வரைமுறை செய்து வழங்கப்பட்டதற்கு மாறாக இனிமேல் கிராமப் புறங்களில் நான்கு சென்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் இரண்டரை சென்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு சென்ட் வரையிலும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வருமான உச்சவரம்பு எதுவுமின்றி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற மனைக்கிரயம் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை அவர்களுக்கே திரும்ப வழங்கப்படும். ★

# வேளாண்மை - ஊரக வளர்ச்சி - நீர் பாசனம் - சமூகத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நிதி ஒதுக்கி, தமிழ்நாட்டிற்கான பதினோரவாது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளிக்கப்பட்டது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் மாநிலத் திட்டக் குழுவின் கூட்டம் 8.12.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையை, மாநிலத் திட்டக் குழுத் தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் திரு.மு.நாகநாதன் அளித்து, இத்திட்டத்தின் முதன்மையான துறைகளின் இலக்குகளையும், அணுகுமுறைகளையும், நிதி ஒதுக்கீடுகளையும் பற்றி விளக்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திட்டத்தின் அனைத்துக் கூறுகள் பற்றி தமது கருத்து களையும், ஆலோசனைகளையும் வழங்கினார்.

பின்னர் திட்டத்தின் மீதான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. பதினோராவது திட்டத்தில், இயைந்த வளர்ச்சியை முன்னிலைப்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு தம் கருத்துகளை முன் வைத்தது. மத்திய அரசின் திட்டக்குழுவால் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 9 விழுக்காடு வளர்ச்சி இலக்கினை இயைந்த வளர்ச்சி அணுகுமுறை வாயிலாக எட்ட வேண்டுமென முன்மொழியப்பட்டது.

ஒன்பதாம், பத்தாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண் துறை வளர்ச்சியானது பல இயற்கைக் காரணிகளுக்குட்பட்டு, பல்வேறு காரணங்களால் பெரும்பாதிப்புக்கு உள்ளானது. இருப்பினும், தொழில், பணித் துறைகளில் ஏற்பட்ட தொடர் வளர்ச்சியால் தமிழகப் பொருளாதாரம் சீரான வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

இத்திட்ட காலத்தில் வேளாண் துறையில், ஆண்டு வளர்ச்சி 4 விழுக்காட்டினை எட்ட வேண்டும் என்ற இலக்கு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. துறை வாரியாக பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகால நிதி ஒதுக்கீட்டைவிட, இத்திட்ட காலத்தில் நிதி ஒதுக்கீடு அளவு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 80 ஆண்டுகளாக இடஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு, சமுதாயத் துறையில் பெருமளவில் பொதுச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு, சமூகநீதி முன்னிலைப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, மனித வளர்ச்சிக் குறியீடுகளில் பஞ்சாப், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த நிலையில் தமிழ்நாடு 1991ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்றாம் இடத்தில் இருந்து வருகிறது.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்ட பரந்த நோக்கங்களின் அடிப்படையில், வேளாண்துறை, ஊரக வளர்ச்சி, நீர்ப்பாசனம், சமூகத் துறை ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பத்தாவது திட்ட காலத்தின் மொத்த செலவான 43 ஆயிரம் கோடி ரூபாய் அளவைவிட, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திட்ட நிதி ஒதுக்கீடு 85 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மொத்தத் தொகையில் வேளாண் துறை, நீர்ப்பாசனம், ஊரகத் துறைகளுக்கு 25.6 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக் காலத்தில் வேளாண் துறைக்கு 9.18 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி, நலவாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி, குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய சமுதாயத் துறைக்கு மொத்தத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 43.04 விழுக்காடு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் விரைந்த வளர்ச்சியைப் பெற்று வரும் தொழில், பணித் துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், மின்சாரம், நெடுஞ்சாலைப் போக்குவரத்து வசதிகள் முதலான கட்டமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 30.76 விழுக்காடு அளவில் இருக்கும்.

திட்ட நிதி ஒதுக்கீடுகள் நீடித்த வேளாண் வளர்ச்சியைப் பெறுவதற்கு உறுதுணை புரியும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளான மாநிலப் பொருளாதாரத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 9 விழுக்காட்டினைப் பெறுவதற்குரிய தொடர் முயற்சிகளை தமிழ்நாடு மேற்கொள்ளும்.

இந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துறைவாரியான நிதி ஒதுக்கீடுகள் 19.12.2007 அன்று புதுடெல்லியில் நடைபெற உள்ள தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, இறுதி வடிவம் பெற்ற பின் திட்டங்கள் பற்றிய முழு விவரங்கள் செய்தி ஊடகங்களுக்கு அளிக்கப்படும்.

இக்கூட்டத்தில் திட்டக்குழுவின் முழுநேர உறுப்பினர் முனைவர் திரு.இராம.சீனுவாசன், பகுதி நேர உறுப்பினர்கள் திரு.இலட்சுமிகாந்தன் பாரதி,(ஓய்வு), திரு.ஜி.சிதம்பரம், முனைவர் திரு.பெ.ஜெகதீசன், திரு.கருமுத்து தி.கண்ணன், திரு.தமிழருவி மணியன், மருத்துவர் சுநிதி சாலமன், உறுப்பினர்–செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.பா., ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர்–முதன்மைச் செயலர் திரு.ஏ.நாகராசன், இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன் இ.ஆ.ப., ஆகியோரும் கலந்துகொண்டனர்.

❖ ❖ ❖

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**அவர்களின் வேண்டுகோளின்படி**

விவசாயிகளின் நலன் கருதி, டிசம்பர் – ஜனவரி மாதங்களில்
விவசாயிகளுக்கு தேவையான 68,500 மெ.டன் உரம்
மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
இதனால் தமிழகத்தில் எந்த மூலையிலும் உரத்தட்டுப்பாடு இல்லை.




# அரியலூர் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும்

**புதிய அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கிவைத்து**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

தொகுப்பு :

**த.மருதப்பிள்ளை**
செய்தி – மக்கள் தொடர்பு
அலுவலர்,
பெரம்பலூர்

தற்போது உள்ள பெரம்பலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு "பெரம்பலூர் மாவட்டம்" என்றும், அரியலூரைத் தலைநகராகக் கொண்டு "அரியலூர் மாவட்டம்" என்றும் அமைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் (25.7.2006) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது அரியலூர் மாவட்டம் மீண்டும் வரும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டும், உள்ளூர் மக்களின் விருப்பத்தை ஏற்றும் அரியலூரைத் தலைநகராகக் கொண்டு புதியதாக

அரியலூர் மாவட்டம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதன்படி பெரம்பலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு பெரம்பலூர் வருவாய்க் கோட்டம், பெரம்பலூர், குன்னம், வேப்பந் தட்டை ஆகிய மூன்று வட்டங்களைக் கொண்டும் பெரம்பலூர் மாவட்டம் அமையும்.

அரியலூரைத் தலைநகராகக் கொண்டு இரண்டு வருவாய்க் கோட்டங்கள் – அரியலூர், உடையார்பாளையம் மற்றும் மூன்று வட்டங்கள் (தாலுக்காக்கள்) – அரியலூர், உடையார் பாளையம் மற்றும் செந்துறை ஆகியவைகளைக் கொண்டு அரியலூர் மாவட்டம் அமையும்.

புதிய அரியலூர் மாவட்டம் நவம்பர் மாதம் 23–ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. புதிய அரியலூர் மாவட்டத்திற்கு 73 பணியிடங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளது.

அரியலூரில் 23.11.2007 அன்று பெற்ற விழாவில் தமிழகத்தின் 31–ஆவது மாவட்டமாக அரியலூர் மாவட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 5,973 நபர்களுக்கு ரூ.2 கோடியே 66 இலட்சம் மதிப்பில் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் 17 புதிய வழித்தடங்களில் அரசுப் பேருந்துகளை இயக்கி வைத்தார்.

இந்த விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:–

“அரியலூரில் பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி உத்தரவிட்டதைத் தொடர்ந்து 23.11.2007 அன்று அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கி வைப்பதுடன், இம்மாவட்ட மக்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது. அதன்படி ஊரக வளர்ச்சித்துறை மூலம் 1,423 நபர்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனாக ரூபாய் 72.51 இலட்சமும், 45 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள 743 மகளிருக்கு சுழல் நிதி மற்றும் கடனாக ரூபாய் 18 இலட்சமும், வருவாய்த்துறை மூலம் 2,337 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நல உதவிகளாக ரூ.1 கோடியே 32 இலட்சம் மதிப்பிலும், 100 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகளும் வழங்கப்படுகின்றன.

இது தவிர வேளாண்மைத் துறை மூலம் 100 விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருள்களும், மாவட்டத் தொழில் மையம் மூலம் 7 நபர்களுக்கு 2.60 இலட்சம் மதிப்பில் சுயதொழில் கடன் உதவியும் சுகாதாரத் துறை மூலம் 60 கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவியும், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் 50 நபர்களுக்கு ரூபாய் 11.25 இலட்சம் மதிப்பிலும் சமூகநலத் துறை மூலம் 60 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு மூவலூர் இராமாமிர்தம் பெயரிலான திட்டத்தில் ரூ.9 இலட்சமும், தாட்கோ திட்டத்தில் 97 ஆதிதிராவிட மகளிருக்கு பல்வேறு உதவிகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 96 நபர்களுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலும், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

அரியலூர் மாவட்ட மக்களின் பல ஆண்டு கால கோரிக்கை இன்று மீண்டும் நிறைவேற்றப்பட்டுள்ளது. முதன் முதலாக 1995ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் 3ஆகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்திற்கு அரியலூர், தலைமையிடம் வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கை அன்றைய அ.தி.மு.க அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் பிறகு 1.1.1997இல் திருவாரூர், தேனி மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. அதனையடுத்து 19.1.2004இல் தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் தோற்றுவிக்கப் பட்டது. அந்தக் கணக்கின்படி இன்று அரியலூர் 31ஆவது மாவட்டமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 16.5.1999 அன்று அரியலூர் அருகே வாரணவாசியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தைத் தொடங்க அறிவித்தார்.

அதன்படி 30.12.1999 முதல் தனி அலுவலரும் நியமிக்கப்பட்டு 1.1.2001 முதல் செயல்பட்டு வந்த அரியலூர் மாவட்டத்தை 19.4.2002 அன்று ஒரே நாளில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அரியலூர் மாவட்டத்தை பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைத்து உத்தரவிட்டார். அன்று எதிர்த்து யாரும் போராட்டம் நடத்தவில்லை. ஆனால் 2006இல் மீண்டும் 5ஆவது முறையாக கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றவுடன் மீண்டும் அரியலூர் மாவட்டக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. நாங்கள் சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் உறுதி அளித்தபடி மீண்டும் அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கிட முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

**பழுப்பு நிலக்கரி மின் திட்டம்**

இங்கே அமரமூர்த்தி பேசும்போது சொன்னார். நான் தொடங்கி வைக்கும் முதல் மாவட்டம் என்று. இது எனக்கு கிடைத்த முதல் வாய்ப்பு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தொடங்கி

வைத்துள்ள முதல் மாவட்டம் தமிழகத்தில் முதல் மாவட்டமாக வளரவேண்டும். முந்தைய ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் எது கேட்டாலும் கிடைக்காது. ஏசுபிரான் சொல்லிய தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கும் மேலாக தற்போது யாரும் கேட்காமலேயே வழங்கும் முதல்வராக கலைஞர் இருக்கிறார். புதிய அரியலூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வாய்ப்பாக உள்ளது. பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் 90 சதவிகிதம் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள ஜெயங்கொண்டம் பகுதிக்கும் திட்டம் நிறைவேற்ற அரசாணை வெளியிடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. இராசா அவர்கள் பேசும்போது, அரியலூர் மாவட்டம் பிரிக்கப்படுவதால் பெரம்பலூர் மாவட்டம் சிறியதாக ஆகும் என்றும், இதனால் அப்பகுதியில் வளர்ச்சி குறையும் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். அப்பகுதியின் வளர்ச்சிக்காக சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல் அப்பகுதியில் மருத்துவ கல்லூரி தொடங்கவும் முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுபோல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சிக்காகவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிகப்பெரிய திட்டமாகும். இத்திட்டத்தினால் தமிழகத்தில் உள்ள 12,618 கிராமங்கள் முழுமையான அடிப்படை வசதிகள் பெற உள்ளன. ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 65 ஊராட்சிகளில் 1,880 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 1,699 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. நடப்பாண்டு 65 ஊராட்சிகளில் 1,075 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 904 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுபோல் தமிழகத்தில் உள்ள 140 பேரூராட்சி களுக்கும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் பணிகளை மேற்கொள்ள திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்ற விழா மேடையிலே அறிவித்த 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டமும், விவசாயிகளின் ரூ.7 ஆயிரம் கோடி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி, சத்துணவுடன் வாரம் 3 முட்டை வழங்கும் திட்டமும் இதுவரை சிறப்பாகத்தான் செயல்பட்டு வருகின்றன. இவற்றைப் போல்தான் கிராம மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டமும் அறிவித்தபடி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத அனைத்து ரேசன் அட்டை உள்ளவர்களுக்கும் வழங்கப்படும். இந்த திட்டத்தை தவறின்றிச் செயல்படுத்திட முதலமைச்சர் தலைமையிலான குழு இதுவரை 20 முறை கூடி, டி.வி கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை ஆய்வு செய்துள்ளது. இதனால் மூன்றாம் கட்ட இலவச டி.வி. வழங்கும் திட்டத்தில் அரசு ஒதுக்கீட்டில் ரூபாய் 163 கோடி மிச்சமாகியுள்ளது. இதனால் மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் கலர் டி.வியுடன் 4 இலட்சம் கலர் டி.வி. கூடுதலாக வாங்கப்பட்டு 34 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நவம்பர் 27 ஆம் தேதி முதல் வழங்கப்பட உள்ளன. இத்திட்டத்தை முதல்வர் கலைஞர் சென்னை சேப்பாக்கத்தில் தொடங்கி வைக்க உள்ளார்.

இதுபோல் மக்களுக்கான திட்டங்களை இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. புதிய மாவட்டத்தைப் பெற்றுள்ள இப்பகுதி அனைத்துப் பொதுமக்களும் எப்போதும் ஆதரவாக இருக்க வேண்டும். இந்த மாவட்டத்திற்கு தேவையான அனைத்துத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு தேவையான அளவு வழங்கப்படும். மாவட்டம் முதன்மை பெற்றிட அனைவரும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்"என்று உரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.இராசா, மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.வெள்ளகோவில் சாமிநாதன், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம். உபயதுல்லா மற்றும் உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர். முன்னதாக பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அனில் மேஷ்ராம் இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். முடிவில் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.மு. சேவியர்கிறிசோ நாயகம், இ.ஆ.ப., நன்றி தெரிவித்தார்.



# மாநகராட்சி சமுதாயக் கல்லூரியில் பயின்ற 90 மாணவ, மாணவியருக்கு தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதற்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

**எஸ்.செல்வராஜ்,**
மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது 1999 ஆம் ஆண்டு ஏழுகிணறு, திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், ஆழ்வார்பேட்டை ஆகிய நான்கு இடங்களில் சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கினார். கழக அரசு பொறுப்பேற்றவுடன் இக்கல்லூரிகள் மீண்டும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள் வேலை வாய்ப்பினை, செயல்திறனை, தொழில் பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு தரமான கல்வியை வழங்கி வருகின்றன. சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மிகவும் பின் தங்கியுள்ளவர்களுக்கு இக்கல்லூரியில் முன்னுரிமை வழங்கி சேர்க்கப்படுகின்றனர்.

சென்னை மாநகராட்சி சமுதாய கல்லூரியில் கணினி நுட்பவியல், அச்சுத்தொழில் நுட்பவியல், இரண்டு / நான்கு சக்கர வாகன நுட்பவியல், பெண் செவிலியர் உதவியாளர், கணினி பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு, அலுவலக மேலாண்மை, உணவக மேலாண்மை மற்றும் ரொட்டித் தயாரிப்பு ஆகிய எட்டு வகையான தொழிற் கல்விகள் கற்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஆகஸ்ட் 2006 வரை 1,900 மாணவ / மாணவியர் பயிற்சி பெற்றவர்களில் 90 சதவீதம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்று குடும்பத்திற்குப் பெரிதும் துணை நிற்கின்றனர்.

தற்போதைய நடைமுறை வாழ்விற்கு ஏற்ற Business Process Outsourcing (B.P.O), Customer Relations and Sales, Hospitality Services ஆகிய புதிய 3 மாத குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகள் சென்னை மாநகராட்சியின் சமுதாயக் கல்லூரியில், இக்கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

இத்துறையில் அனுபவம் பெற்ற டாக்டர் ரெட்டி பவுண்டேஷன், ஹைதராபாத் (Dr. Reddy's Foundation, Hyderabad) என்ற தரமான நிறுவனமும், சென்னை மாநகராட்சியும் சேர்ந்து பயிற்சிகள் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ஆகஸ்ட் 2007இல் முதற்கட்டமாக 105 மாணவ / மாணவிகள் சேர்க்கப்பட்டு, அதில் பயிற்சியை முழுமையாக முடித்த 90 மாணவ / மாணவிகளுக்கு முன்னோடி நிறுவனங்களான மெக்டோனால்ட்ஸ் (MCDONALDS), இம்பெடஸ் (IMPETUS (Reliance) அர்விந்த் பிராண்ட்ஸ் (ARVIND BRANDS (Retail), ஏ.பி.என். ஆம்ரோ (ABN AMRO), நோக்கியா (NOKIA), ஸ்மோக்கிங் ஜோ'ஸ் (SMOKING JOE'S (Hotel) ஸ்பென்சர்'ஸ் டெய்லி (SPENCER'S DAILY), வோடோபோன் (VODAFONE (HUTCH) டிஷ் டி.வி. (DISH TV), காபி டே

> "தற்போதைய நடைமுறை வாழ்விற்கு ஏற்ற புதிய 3 மாத குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகள் சென்னை மாநகராட்சியின் சமுதாயக் கல்லூரியில் இக்கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது."

ஹோட்டல் (COFFEE DAY (Hotel) மற்றும் ஸ்டார் சிட்டி ஹோட்டல் (STAR CITY Hotel) போன்றவற்றில் மாநகராட்சி முயற்சியுடன் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு சராசரியாக ரூ.4,000 முதல் ரூ.6,000 வரை மாத வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாணவ / மாணவிகளுக்கு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். பணி ஆணை பெற்ற இக்கல்லூரி மாணவ / மாணவியர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்தனர்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு கே. தீனபந்து, இ.ஆ.ப, சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

# நகர்ப்புற ஏழை மக்களுக்கு ரூ.1,437.93 கோடியில் அடிப்படை வசதி அளிக்கும் திட்டம்



நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதியான வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு வசதி ஆகியவைகளை மேம்படுத்துதல், ஏழை மக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி, அடிப்படை வசதிகள் மற்றும் குடிசை வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அளவிலான வழிகாட்டும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு 137 கோடியே 44 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய்க்கும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 235 கோடியே 90 இலட்சம் ரூபாய்க்கும், மதுரை மாநகராட்சிக்கு 195 கோடியே 46 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய்க்கும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு 823 கோடியே 98 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கும், ஆணையூர் நகராட்சிக்கு 6 கோடியே 38 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கும், தாம்பரம் நகராட்சிக்கு 6 கோடியே 33 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய்க்கும், பல்லவபுரம் நகராட்சிக்கு 6 கோடி ரூபாய்க்கும், ஆவடி நகராட்சிக்கு 5 கோடியே 95 இலட்சம் ரூபாய்க்கும், குறிச்சி நகராட்சிக்கு 4 கோடியே 29 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும், குனியமுத்தூர் நகராட்சிக்கு 4 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கும், கவுண்டம்பாளையம் நகராட்சிக்கு 3 கோடியே 20 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கும், அவணியாபுரம் நகராட்சிக்கு 3 கோடியே 15 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும், திருமங்கலம் நகராட்சிக்கு 3 கோடியே 14 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கும், திருப்பரங்குன்றம் நகராட்சிக்கு 2 கோடியே 43 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய்க்கும் ஆக மொத்தம் 1,437 கோடியே 93 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு 20.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இதன் மூலம் 47 ஆயிரத்து 513 வீடுகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட 4 முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

1. நெற்குன்றம் கிராம பஞ்சாயத்தில் குடிநீர்த் திட்டம் – 21.70 கோடி ரூபாய்.
2. ஆவடி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் – 177.10 கோடி ரூபாய்.
3. வள்ளுவர்கோட்டம் பகுதியில் தொடர்ச்சியான குடிநீர் வசதி – 31.77 கோடி ரூபாய்.
4. சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் மற்றும் பெரிய நீர்வழி கால்வாய் மேம்பாடு – 998 கோடி ரூபாய்.

# சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை



சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிடும் விழா சென்னை – இராஜா அண்ணாமலைபுரம் – இமேஜ் கூட்ட அரங்கில் 29.11.2007 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் சுழல் நிதி வழங்கி அவர் ஆற்றிய உரை வருமாறு:

"இளைஞர்களின் எழுச்சிமிகு தோற்றத்துடனும், ஏற்றமிகு தோற்றத்துடனும் இந்த விழா இமேஜ் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. சமுதாயத்தில் இளைஞர் களின் இமேஜை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விழா இங்கு நடைபெறுகிறது.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் 1989–ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் தொடங்கப்பட்டது. அரசியல் நோக்கத்துடன், சுயவிளம்பரத்தோடு குறுகிய நோக்கத்தோடு சுயஉதவி குழுக்கள் தொடங்கப்படவில்லை. பெண்கள் நாட்டில் நம்பிக்கையுடன் சுயதொழில் புரிந்து வளர்ந்திட வேண்டும் என்ற சேவை மனப்பான்மையுடன் தொடங்கப்பட்டது. வங்கிகள் மூலம் குறைந்த

தொகுப்பு: **எஸ். செல்வராஜ்**, செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி

வட்டி விகிதத்தில் கடன் உதவி வழங்கி வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தில் 1989–ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டன. இன்று அவை நன்கு வளர்ச்சி அடைந்து 3 இலட்சத்து 54 ஆயிரம் குழுக்களாக உயர்ந்துள்ளன. இதில் ஏறக்குறைய 57 இலட்சம் குடும்பங்களை சார்ந்தச் பெண்கள் வாரந்தோறும், மாதந்தோறும் சிறுசேமிப்பு செய்து வங்கிகளில் கடன் பெற்று தொழில் செய்து தங்களின் குடும்பங்களை பொருளாதாரத்தில் முன்னேற்றி உள்ளனர்.

**பொருளாதார முன்னேற்றம்**

கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி 10.26 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி 8.2 சதவீதம் மட்டுமே. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைவிட, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகமானதற்குக் காரணம் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்களின் பொருளாதார முன்னேற்றமே ஆகும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் அயராது பாடுபட்டு பொருளாதார நிலையில் முன்னேறி உள்ளனர். இளைஞர்களின் வாழ்வில் வசந்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இளைஞர் சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தி.மு.கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். கடந்த ஆட்சியில் சுயஉதவிக் குழுக்கள் பட்ட கஷ்டங்களை நன்கு அறிவோம். இந்தியா முழுவதும் பல இளைஞர்கள் வேலைவாய்ப்புத் தேடி வருவதை நாம் அறிவோம். அவர்கள் நேர்முகத் தேர்வுகளுக்காக இரயில், பேருந்து போன்றவற்றில் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள உதவித் தொகைகள் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் வழங்கப்படுகிறது.

2006–07ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இளைஞர் குழுக்களை அமைப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் ரூ.10 கோடி ஒதுக்கப்படும் என்று மானிய கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டு கடந்த ஓராண்டு காலத்தில் 16 ஆயிரத்து 269 இளைஞர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 180 இளைஞர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். வங்கிகளின் சேமிப்புத்தொகை ரூ.13.48 கோடியாகும்.

**இளைஞர் குழுக்கள்**

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை ஒன்று சேர்த்து குழுக்களாக அமைத்து அந்தக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களிடையே சேமிப்பு ஏற்படுத்தி அதிக அளவில் உள் கடன் பெற வேண்டும் என்பதற்காக சுழல்நிதி வழங்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் முயற்சியின் பலனாக 100 இளைஞர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 25 ஆயிரம் வீதம் ரூபாய் 25 இலட்சம் இன்று வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 2 ஆயிரத்து 700 இளைஞர் குழுக்களுக்கு வங்கிகளில் கடன்கள் பெறுவதற்கு முன்னோட்டமாக ரூபாய் 6.75 கோடி சுழல் நிதியாக வழங்கப்படுள்ளது.

இளைஞர் சுயஉதவிக் குழுக்கள், சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்குப் பல்வேறு தொழில் பயிற்சிகளை கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 5,000 இளைஞர்களுக்கு ஒருவருக்கு ரூபாய் 10,000 செலவில் தொழில்கல்வி பயிற்சிப் அளிக்கப்படுள்ளது. இளைஞர்கள் சுயமாகத் தொழில் செய்ய வங்கிக்கடன் பெற்றுத்தரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ரூபாய் 10 கோடி செலவில் 10,000 இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்களின் பயிற்சித் தொகை ரூ.7.50 லிருந்து தற்போது ரூ.45ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

1965–ஆம் ஆண்டு தமிழகத்தில் இந்தி திணிக்கப்பட்டபோது அதை எதிர்த்துஇராஜேந்திரன் என்ற இளைஞன் போராடினான். அப்போது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அடக்க துப்பாக்கிச்சூடு நடத்த அனுமதிக்கப்பட்டது. அந்த இளைஞன் மீது குண்டுகள் பாய்ந்து இறக்கும் தருவாயில் கூட "இந்தி ஒழிக, தமிழ் வாழ்க" என்று முழக்கமிட்டு இந்திய வரலாற்றில் சாதனை புரிந்து இறந்தான். இளைஞர்களும் மகளிர் குழுக்களைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு சிறந்து விளங்க வேண்டும். தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்".

# உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் குறித்த மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அறிக்கைகள்



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு உள்ளாட்சித் துறைத் தலைவர் அவர்கள் அளித்தார்**

**1996**ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உள்ளாட்சிகளுக்கான அதிகாரப் பரவலாக்கம் குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய காந்தியவாதியும், மாநிலத் திட்டக்குழு உறுப்பினருமான திரு. எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அதன் பின்னர் 1997ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பெருவாரியான பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டன.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று 11.8.2006 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றப்

பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, மாநில அளவிலான மூன்றாவது உயர்நிலைக் குழுவை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைத்து 22.1.2007 அன்று அரசு ஆணையிட்டது. இக்குழுவில் அரசு உயர் அதிகாரிகள், பல்வேறு கட்சிகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற்றனர்.

இக்குழுவின் கூட்டம் 7.3.2007 மற்றும் 19.3.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் தவிர்த்து இதர உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்போடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று சென்னையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அதிகாரப் பரவலாக்கம் குறித்து தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களின் கருத்துகளையும் அறிந்திட ஈரோடு, திருவண்ணாமலை, திருச்சி, விருதுநகர் ஆகிய நகரங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களின் மண்டல கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

உயர்நிலைக் குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் மற்றும் அரசுத் துறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள் உடனான ஆலோசனைக் கூட்டங்கள், வல்லுநர்களின் பரிந்துரைகள் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சி மன்றத் தலைவர்களின் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பெற்று இப்பரிந்துரைகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஆய்வு செய்து, ஊரக உள்ளாட்சிகளுக்கும், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்த பரிந்துரைகள் அடங்கிய இரண்டு அறிக்கைகளை இறுதி செய்துள்ளது. இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் உயர்நிலைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று அவற்றை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 10.12.2007 அன்று அளித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது நெல்லை மாநகர மேயர் திரு.ஏ.எல்.சுப்பிரமணியன், திருச்சி மாநகர மேயர், திருமதி. சாருபாலா தொண்டைமான், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைச் செயலர் திரு.க.அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., உயர்நிலைக்குழு வல்லுநர்களான உள்துறைச் செயலர், திருமதி.எஸ்.மாலதி, இ.ஆ.ப, திரு.தமிழருவி மணியன், காந்தி கிராம பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.க.பழனித்துரை, ஆகியோரும் உடனிருந்தனர்.❖

---

**அரசுப் பள்ளிகளில், 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 300 மாணவ மாணவியர் (மாவட்டத்திற்கு 10 பேர் வீதம்) அவரவர் விரும்பும் சிறந்த பள்ளிகளில் பயில அரசு நிதி உதவி வழங்கிடும் திட்டம் தொடங்கப்பட்டது.**



# ஈரோடு மாவட்டம் பிரம்மதேசம் பஞ்சாயத்துக் கூட்டமைப்பின் தன்னலமற்ற சேவைக்கு தமிழக அரசின்

# மணிமேகலை விருது

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம் என்ற கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவினர்களைக் கொண்டு பஞ்சாயத்து கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டமைப்பில் இருக்கும் 85 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1,350 பேர் தற்போது உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் ஆற்றிய பணியினைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. இவர்களுக்கு விருது கிடைத்தது குறித்து இக்குழுவினரை நேரில் சந்திக்க பிரம்மதேசம் சென்றபோது அவர்கள் அப்போது மாதாந்திரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அரசு மணிமேகலை விருது வழங்கியுள்ளது குறித்து கேட்ட போது இந்தக் கூட்டமைப்பின் செயலாளர் திருமதி வெண்ணிலா (வயது 42) தெரிவித்ததாவது :-

"எங்களுடைய குழு ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகளாகிறது. பஞ்சாயத்திலுள்ள அனைத்து சுயஉதவிக் குழுக்களும் இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. இதுவரை 64 பஞ்சாயத்துக் கூட்டமைப்புக் கூட்டங்களைக் கூட்டியுள்ளோம்.

**–என்.பாலையா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

பஞ்சாயத்துக் கூட்டமைப்பு மூலம் 25 குழுக்களுக்கு தலா ரூ.25,000 நிதி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்களுடைய குழுவினர் வாங்கிய கடனை நிலுவையின்றி செலுத்தி வருகின்றனர். குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார கடனுதவியை முறையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாங்கள் அரசினுடைய திட்டங்களைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி வருகிறோம். கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறோம். கணவன்–மனைவி இடையே உள்ள பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைத்து அவர்கள் நல்லுறவுடன் வாழ அறிவுரை வழங்கி வருகிறோம். அரசினுடைய சிறந்த திட்டமான தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் எங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். இதற்கு அடிப்படை

காரணமும் ஒன்று உண்டு.



அந்தியூர் வட்டாரப் பகுதியில் மலஜலம் கழிப்பதற்காக சாலை ஓரத்தில் அமர்ந்திருந்த 2 குழந்தைகள் இறந்து விட்டனர். குழந்தைகளை இழந்த பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறியும் அவர்களை சமாதானப்படுத்த இயலவில்லை. சாலையில் மல ஜலம் கழித்ததினால் தான் இந்த குழந்தைகளுக்கு இறப்பு ஏற்பட்டது. இந்த இறப்பு எங்களை வெகுவாகப் பாதித்தது. அன்று முதல் சாலைகள் மற்றும் வெளியிடங்களில் பொதுமக்கள் மலஜலம் கழிப்பது சுகாதாரமற்றது என்பதை வலியுறுத்தியும், வீடுகளில் தனிநபர் கழிப்பறையை அரசு கொடுக்கும் நிதியினைக் கொண்டு அமைத்துக் கொள்வதன் அவசியம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

இதன் பயனாக தற்போது 40 மகளிர் சுய உதவிக் குழுவினர்களின் வீடுகளில் தலா ரூ.3,000 வீதம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்து ரூ.1.20 இலட்சம் பெற்று கழிப்பறைகளை அமைத்துள்ளோம். தற்போது அனைத்து வீடுகளிலும் தனி நபர் கழிப்பறை கட்டுவதற்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம். இது தவிர ஈரோட்டிலுள்ள அரசின் கண் மருத்துவமனையினை அணுகி தவிட்டுப்பாளையம் நடுநிலைப்பள்ளியில் இலவச கண் பரிசோதனை முகாமினை நடத்தி, 64 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து, கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

டெல்லியில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியில் பங்கேற்று எங்கள் குழு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மிதியடி மற்றும் கோராப்பட்டு பொருட்களை கண்காட்சியில் விற்பனை செய்தோம். ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு எங்கள் குழு மூலம் சீருடையும், ரூ.2,500 மதிப்பில் மாணவ, மாணவியருக்கு தட்டு, டம்ளர், அங்கன்வாடி பள்ளிகளுக்கு நாற்காலிகள் போன்றவற்றையும் இலவசமாக நாங்கள் வழங்கியுள்ளோம். கிராமசபைக் கூட்டங்களில் பங்கேற்று மக்களுக்குத் தேவையான அடிப்படை பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி அதனை நிறைவேற்றி வருகிறோம்.

ரூ.5,450 மதிப்பில் ஆதரவற்ற 2 நபர்களுக்கு தையல் இயந்திரமும், 3 பேருக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூ.40 ஆயிரம், 4 நபர்களுக்கு வீடு கட்ட கனரா வங்கி மூலம் கடனுதவி, 5 நபர்களுக்கு கல்விக் கடனும் எங்கள் கூட்டமைப்பு வாயிலாக பெற்றுத் தரப்பட்டுள்ளது. 16 குழுவினருக்கு கோராப் பட்டு, மிதியடி போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ரூ.29.80 இலட்சம் தொழில் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது" என்றார்.

இந்தக் கூட்டமைப்பின் பொருளாளர் திருமதி எஸ். மணிமேகலை தெரிவித்ததாவது:- "கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, சாலை வசதி போன்றவைகளை பெற்றுத் தந்துள்ளோம். பிரம்மதேசத்தில் சுகாதார வளாகம், சந்திப்பாளையம் கண்மாய் அருகே தடுப்புச் சுவர் போன்றவைகள் உருவாக்கிட பெரும் முயற்சி எடுத்துக்கொண்டோம்" என்றார். இணைச் செயலாளர் திருமதி எம். ராணி தெரிவித்தபோது,

"சுகாதாரத்திற்கு எங்கள் கூட்டமைப்பு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதனடிப்படையில் செம்புளிச்சாம்பாளையம் கிராமத்தில் அரசு மூலம் இரண்டு சுகாதார வளாகம் கட்டுவதற்கு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டோம். தெருவிற்கு குடிநீர்க் குழாய் இணைப்புப் பெற்றுள்ளோம். தார்சாலை, மற்றும் சாக்கடை வசதியை, எங்களுடைய முயற்சியால் அரசு செய்து கொடுத்துள்ளது" என்றார்.

பிரம்மதேச கூட்டமைப்பின் பொதுச் சேவை, அரசின் திட்டங்களைப் பொதுமக்களுக்கு கொண்டு செல்லுதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இயலாதவர்களுக்கு உதவிகளைச் செய்தல், சுகாதாரத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அரசிடம் பொருளாதார கடனுதவி, தொழில் தொடங்க கடனுதவி, சுழல் நிதி பெற்று கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபடுதல் போன்ற செயல்பாட்டினைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கி இந்தக் கூட்டமைப்பினை கௌரவித்துள்ளது.

இந்தச் சீரிய பணிக்காக சென்னை கலைவாணர் அரங்கில் 25.9.2007 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூ. ஒரு இலட்சம் நிதியுதவி மற்றும் மணிமேகலை விருதுச் சான்றிதழ் ஆகியவற்றை இக்குழுவிற்கு வழங்கிப் பாராட்டினார்.

## பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடும் குப்புச்சிபாளையம் ஸ்ரீ அம்மன் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு தமிழக அரசின் மணிமேகலை விருது

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குப்புச்சிபாளையம் கிராமத்தில் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழு என்கிற அமைப்பு இயங்கி வருகிறது. 2000–ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழுவில் தற்போது 12 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவின் பொது சேவைக்காகவும். பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில் மூலம் அயராது பாடுபட்டு வரும் விடா முயற்சியினை பாராட்டியும் அரசு மணிமேகலை விருதினை வழங்கியுள்ளது. இந்த குழு செயல்படும் விதம் குறித்து நேரில் பார்வையிட்டு இக்குழுவின் ஊக்குநர் திருமதி கே.எம். தனபாக்கியம் அவர்களிடம் நேரில் குழு செயல்பாடுகள் குறித்து பேட்டி காணப்பட்டது. அப்போது அவர் தெரிவித்ததாவது.

12 பேர்கள் உள்ள எங்கள் குழு மூலம் 2002ஆம் ஆண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ரூ.1.20 இலட்சம் பொருளாதார கடன் உதவி பெற்று அதன் மூலம் 12 தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. அன்று முதல் தலையணை, மெத்தை ஆகியவைகள் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறோம். அருகாமையில் உள்ள இலவம் பஞ்சு அரவை மில்லுக்குத் தேவைப்படும் அளவிற்கு இலவம் பஞ்சினைக் கொள்முதல் செய்து தலையணை மற்றும் மெத்தைகள தயார் செய்கிறோம். இந்த அரவை மில்லிற்கு பொள்ளாச்சி, சிறுமலை, ஒட்டன்சத்திரம், ஆயக்குடி மற்றும் கேரளா மாநிலத்திலிருந்து இலவம் பஞ்சு பெறப்படுகின்றன. சென்ற ஆகஸ்ட் மாதம் நூறு தலையணைகள், 50 மெத்தைகள் தயாரிக்கப்பட்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1.18 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு 50 மெத்தைகள், 150 தலையஷணகள் தயாரிக்கப்பட்டு சேலம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1.25 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அதே போன்று 2005ஆம் ஆண்டு 300 மெத்தைகள். 2006–ஆம் ஆண்டு 2,300 மெத்தைகள் தயாரிக்கப்பட்டு கரூர் மற்றும் காதி கிராப்ட் அங்காடிக்கு வழங்கப்பட்டன.

இக்குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 30 நாட்களுக்கும் வேலை கிடைத்தால் ஒருவருக்கு மாதத்திற்கு ரூ.2,500 முதல் ரூ.3,000 வரை வருமானம் கிடைக்கும். சாதாரணமாக மாதத்தில் 15 முதல் 20 நாட்கள் தான் வேலை கிடைக்கும். அவ்வாறு வேலை கிடைக்கின்றபட்சத்தில் இலவம் பஞ்சுகளை தலையணைகளில் அடைப்பது பொறுத்து நாள் ஒன்றிற்கு ரூ.60 முதல் 100 வரை வருமானம் கிடைக்கும். இதில் கிடைக்கின்ற வருமானம் போதுமானதாக இருப்பதால் குடும்ப செலவினங்களை மேற்கொள்ளவும், பிள்ளைகளை படிக்க வைக்கவும் முடிகிறது. ஆனால் இதற்கு முன்னர் விவசாயக் கூலி வேலைக்குச் சென்று வந்தோம். களையெடுத்தல், நாற்று நடுதல் போன்ற விவசாயக் கூலி வேலை மூலம் குறைந்த வருவாய் தான் கிடைத்தது. தற்போது இந்த நிலை நீங்கி ஓரளவிற்கு வருமானம் கிடைப்பதால் பொருளாதார நிலை சற்று மேம்பட்டு வருகிறது. எனவே தான் இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்குத் தேவைப்படும் நிதி வசதிக்கு பொருளாதார கடனுதவியைப் பெற்றுப் பயன்படுத்தி வருகிறோம்.

தற்போது ரூ.3 இலட்சம் பொருளாதார கடனுதவி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் கோரப்பட்டுள்ளது. இது விரைவில் கிடைத்து விடும். எங்களுடைய தொழிலில் நாங்கள் ஈடுபடும் நேரத்தை தவிர மற்ற நேரங்களில் சமூக சேவையிலும் தன்னலம் கருதாது செய்து வருகிறோம். இதுவரை 12 உறுப்பினர்கள் வீட்டிலும் தனிநபர் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. பல்வேறு குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளோம். சுகாதாரத்தின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். குப்புச்சிப்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள 2 சுகாதார வளாகத்தினை மகளிர் சுயஉதவிக் குழுவினர் பராமரித்து வருகின்றனர். 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் கடலோர மாவட்டங்களில் சுனாமி ஏற்பட்டு அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்கு நிவாரண உதவியாக நிதி திரட்டி வழங்கியுள்ளோம். போலியோ நோய் மற்றும் எய்ட்ஸ் அபாயம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். இலவச மருத்துவ முகாம்களை நடத்தி பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்திட உதவி புரிந்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மகளிர் சுய உதவிக் குழுவின் பொது சேவையையும், வறிய நிலையில் இருந்து அரசின் மூலம் தொழில் தொடங்குவதற்கு பொருளாதார கடனுதவி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டு வரும் இந்த குழுவின் சேவையைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கியுள்ளது. சென்ற 25.7.2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மணிமேகலை விருதையும், ரூ.50 ஆயிரத்திற்கான நிதியுதவியையும் வழங்கி பாராட்டியுள்ளார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் ஊரகப் பகுதி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 15 ஆயிரத்து 958 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுவில் 2,54,396 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவின் மூலம் வங்கிகளில் ரூ.51 கோடியே 55 இலட்சத்து 99 ஆயிரத்து 873 சேமிப்பு உள்ளது. ★

# உள்ளாட்சித்துறையில் நிரப்பப்படாமல் இருந்த பணியிடங்களில் இதுவரை 15,311 பணியாளர்கள் நியமனம்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு பெற்றுள்ள 206 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி, புதியதாகப் பணியில் சேரும் பொறியாளர்களுக்கான 3 நாள் அடிப்படைப் பயிற்சித் திட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டியில் உள்ள மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அரங்கில், 19.11.2007 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

கடந்த ஆட்சியின்போது அரசுப் பணியிடங்களில் காலியான இடங்களை நிரப்பிடத் தடை ஆணை விதிக்கப்பட்டது. ஊரகப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற பெரும் பொறுப்பு உடைய இத்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்பாததால் வளர்ச்சிப் பணிகளைச் செயல் படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டது. இதனை உணர்ந்ததால்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, வேலை நியமனத் தடையை நீக்கி ஆணையிட்டவுடன் இத்துறையில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களும் நிரப்பப்படும் என சட்டமன்றத்தில் இத்துறை சார்பாக அறிவிக்கப்பட்டபடி, அனைத்து காலிப் பணியிடங்களுக்கும் நியமனம் நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழக அரசு, வேலை நியமனத் தடையை நீக்கி ஆணையிட்டவுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைதான் காலிப் பணியிடங்களை நிரப்பிட முதன் முதலாக நடவடிக்கை மேற்கொண்டது. இத்துறையின் பல்வேறு நிலையிலான அலுவலகங்களில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் இதுவரை 15,311 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

13,100 மக்கள் நலப் பணியாளர்கள், 745 குடிநீர் பொருத்துநர் உதவியாளர்கள், 322 சாலை ஆய்வாளர்கள், 202 பணி மேற்பார்வையாளர்கள், 209 தட்டச்சு சுருக்கெழுத்தர்கள், 17 இணை இயக்குநர்கள், 95 உதவி இயக்குநர்கள், 206 உதவிப் பொறியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், இரவுக் காவலர்கள் என மொத்தம் 15,311 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றிடத் தேர்வு பெற்றுள்ள 206 உதவிப் பொறியாளர்களுக்கும் பணி நியமன ஆணையை வழங்கி தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டு 3 நாள் அடிப்படைப் பயிற்சியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்களின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ள ஊராட்சி ஒன்றிய உதவிப் பொறியாளர்கள் தங்களது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்றும், செயல்படுத்தும் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்போதுதான் திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு விரைவில் பயன் அளிக்கும் என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர் திரு. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., மற்றும் இயக்குநர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. ஆகியோரும் கலந்து கொண்டனர். ✶



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வை. பெருமாள் அவர்களின் மருத்துவச் செலவிற்கான ஈட்டுத் தொகை 2,81,087 ரூபாய்கான காசோலையை, மறைந்த உறுப்பினரின் மனைவி திருமதி.பெ. ராசம்மாள் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (9.12.2007)

# மகளிர் சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்திட உதவித் திட்ட அலுவலர்கள் நியமனம்

1989ஆம் ஆண்டில் மகளிர் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கம் தமிழகமெங்கும் உள்ள ஏழை எளிய மகளிரின் வாழ்வில் ஒளியேற்றும் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 3.54 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் 57 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குக்களின் சேமிப்புத் தொகை மொத்த ரூ.1,582 கோடியாகும். ரூ.2,520 கோடி அளவிற்கு வங்கிகள் மூலம் கடன் வசதி பெற்று சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. சுயஉதவிக் குழுக்களின் செயல்பாட்டினை மேலும் மேம்படுத்த தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிறப்பாகச் செயல்படும் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்படுகின்றன. கல்வியறிவில்லா சுயஉதவிக் குழு மகளிருக்கு அடிப்படைக் கல்வி அளிக்கும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், பிற ஊரக வளர்ச்சித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை ஈடுபடுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

மாவட்டங்களில் சுயஉதவிக் குழுத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மகளிர் திட்ட அலுவலகங்களை வலுப்படுத்திட கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாவட்டந்தோறும் இரண்டு உதவித் திட்ட அலுவலர்கள் வீதம் 60 உதவித் திட்ட அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்திட அரசு ஆணை பிறப்பித்தது.

மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை முறைப்படி அமைத்தல், குழுக்கள் உட்கடன் பெறும் முறைகளைக் கண்காணித்தல், சிக்கன மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல், தர மதிப்பீடு செய்தல், மானியம் மற்றும் கடனுதவி பெற உதவுதல், முறையாக குழுக் கூட்டங்களை நடத்துதல், கடனைத் திருப்பிச் செலுத்துதல், பயிற்சி அளித்தல், பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட தேவையான ஏற்பாடுகளைச் செய்தல், குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட உதவுதல் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிய பல்வேறு முக்கியப் பணிகளை உதவித் திட்ட அலுவலர்கள் மேற்கொள்வார்கள்.

தகுதியின் அடிப்படையில் உதவித் திட்ட அலுவலர் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழாவும், சுயஉதவிக் குழு முன்னேற்றத்தில் பங்காற்றிடும் அலுவலர்களுக்குப் பயன்படும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "சுய உதவிக் குழு கையேடு" மற்றும் "ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கையேடு" ஆகிய இரு கையேடுகள் வெளியீட்டு விழாவும் 3.11.2007 அன்று சென்னையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உதவித் திட்ட அலுவலர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கியும், "சுயஉதவிக் குழு கையேடு" மற்றும் "ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கையேடு" ஆகிய நூல்களை வெளியிட்டும் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார், நிறைவாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்

# ஈரோடு, திருப்பூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டன

தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகராட்சியின் தலைவராகப் பதவிப் பொறுப்பை ஏற்றிருந்த போது 1917 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17 ஆம் நாள், ஈரோடு நகராட்சியில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம் போன்ற பகுதிகளும் ஈரோடு நகரத்தோடு இணைக்கப்பட்டு விரிவாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் கண்ட அந்தக் கனவை நிறைவேற்றுகின்ற வகையில், ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.9.2007 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி ஈரோடு நகராட்சி அதன் தற்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி 1.1.2008 முதல் ஈரோடு மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுகிறது.

**ஈரோடு நகராட்சி :**

ஈரோடு நகராட்சியின் தற்போதைய பகுதி அப்படியே மாநகராட்சியாக அமைக்கப்பட்டாலும், தந்தை பெரியார் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், பி.பெ.அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளும், திண்டல், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, முத்தம் பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளும் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும்.

**திருப்பூர் நகராட்சி :**

ஆசிய அளவில் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம் முன்னணி இடத்தை வகிக்கின்றது. இந்நகரின் பிரமிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செம்மையான முறையில் அளிக்கும் வகையில் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது.

திருப்பூர் நகராட்சியும் தற்போதைய எல்லைகளுடன் 1.1.2008 முதல் மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது. 15 வேலம் பாளையம், நல்லூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், செட்டிபாளையம், மண்ணரை, தொட்டி பாளையம், ஆண்டிபாளையம், வீரபாண்டி, முருகம் பாளையம், நெருப்பெரிச்சல், முத்தனம்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிப் பகுதிகளும் திருப்பூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும். ஈரோடு மற்றும் திருப்பூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்துவதற்கெனத் தனித்தனியாக இரண்டு அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

# மிகவும் நுணுக்கமாகவும், கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகிற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றி உள்ளது




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.**பரிதி இளம்வழுதி** அவர்கள்

நகர்ப்புற வளர்ச்சி தொடர்பாக "திட்டமிடுதலும், முறைப்படுத்துதலும்" என்ற தலைப்பில், சென்னையில் **4.12.2007** அன்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரையாற்றும்போது,

"நகர் ஊரமைப்புத் திட்டமிடுதலில் நமது மாநிலம் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இந்தத் துறை பல்வேறு நகர்ப்புற வளர்ச்சிக்கேற்பவும், காலத்தின் தேவைக்கேற்பவும் தொடர்ந்து தேவையான மாற்றங்களைச் செய்து திட்டங்களை உருவாக்கி வந்துள்ளது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் திட்டங்களைத் தயாரித்துள்ளது. தவிர, 1920–ஆம் வருட சட்டத்தில் காலத்திற்கேற்ப திருத்தங்கள் கொணர்ந்து, புதியதாக நகர் ஊரமைப்புச் சட்டம் 1971இல் இயற்றப்பட்டது. அக்கால கட்டங்களிலே மண்டலத் திட்டங்கள் தயாரித்து, மக்கள் பங்கேற்புடன் கருத்தரங்கங்கள் நடத்தியுள்ளது. அதன் பின்னர் நகரப் பகுதிகள் அனைத்திற்கும் முழுமைத் திட்டங்கள் தயாரித்துள்ளது. நகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்துள்ளது. சில முக்கிய இடங்களின்



சிறப்பையும், தனித்தன்மையையும் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்துள்ளது என்பதை அறிவீர்கள்.

இது தவிர, நகர் ஊரமைப்புத் துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தயாரித்துள்ளது. நகர் புனரமைப்புத் திட்டம், போக்குவரத்து மேலாண்மைத் திட்டம், புராதன நகர் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டங்களையும் தீட்டியுள்ளது. இது பாராட்டுக்குரிய பணியாகும்.

வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மக்களுக்கான நகர்ப்புறத் தேவையை நிறைவு செய்யவும், துவக்க முதலீட்டுத் திட்டம், போக்குவரத்து நிதி உதவித் திட்டம் மூலமாக நிதி உதவியை உள்ளாட்சிகளுக்கு இத்துறை வழங்கிவருகிறது. புராதன நகரங்களின் அடிப்படைத் தேவைகளுக்காக நகருக்கு ரூ.50 இலட்சம் என்ற அளவில் நிதி மானியமாக அளித்து வருகிறது. மேலும் தொழில்நுட்ப அறிவியலிலும் இத்துறை வளர்ந்து வருகிறது.

இவ்வாறு பரந்துபட்ட அளவில் திட்டங்கள் தயாரித்த போதிலும், நகரங்களின் நிலையை நாளுக்கு நாள் புதுப்புது பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. இதற்கு மக்கள்தொகை வளர்ச்சி ஒரு காரணம் என்ற போதும், இதனை எதிர்நோக்கி தயாரிக்கப்பட்ட திட்டம் அமல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடே முக்கிய காரணம் என நான் கருதுகிறேன். அதைப்போன்றே நகர்ப்புற, கிராமப்புற வளர்ச்சியை முறைப்படுத்த மேற்கொள்கின்ற வரையறைகளும் எதிர்ப்பைச் சந்திப்பதைக் கண்டுவருகிறோம்.

மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற எந்தத் திட்டமும் மக்களின் வரவேற்பைப் பெற்று, செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன் அடைவதை இந்த அரசு மிகவும் விரும்புகிறது. அதற்கு உரிய வழிவகைகளை கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மிகவும் நுணுக்கமாகவும், கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகிற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றி உள்ளது. எனவே, பயனீட்டாளர்களும், திட்டமிடுபவர்களும் கருத்தினைப் பரிமாற இவ்வகையான கருத்தரங்கங்கள் மிகவும் உதவியாக அமையும், அரசு இதனை வரவேற்கிறது.

திட்டமிடுதலில் வல்லுநர்கள் பல்வேறு நுணுக்கங்களைப் பற்றி விரிவுரை செய்ய உள்ளார்கள். அவர்களுடன் பிரதிநிதிகளும் தங்களுடைய கருத்துகள், ஐயப்பாடுகளைப் பகிர்ந்து தெளிவுபெற இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

இந்தக் கருத்தரங்கின் முடிவுகள் எதிர்காலத்தில் திட்டமிடுதலுக்கும், நடைமுறையில் உள்ளவைகளை மாற்றி அமைத்து இத்துறையையும், அதன் பணியை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் என நான் நம்புகிறேன். இக்கருத்தரங்கம் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.'' என்று உரையாற்றினார். ★



# நில உரிமையாளர்களாக மாறும் விவசாயத் தொழிலாளர்கள்

**பொ. முத்தையா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிலமில்லாத விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலேயே வாக்குறுதி அளித்தார்கள். எப்போதுமே சொன்னதைச் செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.9.2006 அன்று நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பயன்பெற்ற விவசாயிகள் சிலரை நேரில் சந்தித்தோம்.

அவர்களில் ஒருவரான நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், குருவாடி என்னும் கிராமத்தைச் சேர்ந்த, திரு.ஜெயபால் கூறுகையில், "எனது மனைவியின் பெயர் அஞ்சம்மாள். எனக்கு 2 மகள்கள் 1மகன் உள்ளனர். நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடியே எங்களுக்கு இலவச நிலம் அளித்துள்ளார்கள். ஆண்டாண்டு காலம் அடிமைகளாகவும் கூலிகளாகவும் உழைத்து தேய்ந்து கொண்டிருந்த நாங்கள் இப்படி ஒரு உரிமை பெற்ற வாழ்வும், சொந்த நிலமும் கிடைக்கும் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

நாங்கள் சாதாரண விவசாயக் கூலித் தொழிலாளர்களாக இருந்தபோது நாங்கள் பெற்ற கூலி எங்கள் அன்றாடச் செலவிற்கே போதாது. கூலி வேலையும் எப்பொழுதும் கிடைக்காது. எத்தனையோ நாட்கள் பட்டினி கிடந்திருக்கிறோம். ஆனால் இப்போது நிலத்திற்குச் சொந்தக்காரராகியிருக்கிறோம். கருண்ண மிக்க நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இந்த நிலத்தில் பயிர் செய்து கடந்த வருடம் முதல் அறுவடை செய்தோம். அதன்மூலம் எங்கள் குடும்பம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தற்போது நடவு செய்துள்ளோம். எங்களுக்கு உரிமையான நிலத்தில் நாங்கள் வேலை செய்யும்போதும், அதில் விளைந்த அரிசியை உணவாக உண்ணும்போதும் நாங்கள் பெறும் இன்பத்திற்கு இணையே கிடையாது. காலமெல்லாம் கூலித்தொழிலாளியாக இருந்த எங்களை ஒரு நிலத்துக்குச் சொந்தக்காரராய் மாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் காலமெல்லாம் நன்றியுடையவர்களாக இருப்போம்". என தெரிவித்தார்.

அடுத்ததாக அதே கிராமத்தில் வசிக்கும் திரு. மகாலிங்கம் என்பவரை சந்தித்தபோது அவர் கூறுகையில் "என் மனைவியின் பெயர் சுதா. எனக்கு ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிலத்தில் கடந்த ஆண்டு வாழ்வில் அடைய முடியாத பூரிப்போடு அறுவடை செய்தோம். நெல்லை விற்று அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் இப்போது எங்கள் குடும்பம்

சந்தோஷமாக இருக்கிறது. இது மாபெரும் ஒரு புரட்சிகரமான திட்டம். ஏனென்றால் எனது அப்பாவும் ஒரு விவசாயக் கூலித் தொழிலாளியாகத்தான் கஷ்டப்பட்டார்.

இந்த நிலம் கிடைக்கும் வரை நானும் ஒரு கூலியாளாகத்தான் உழைத்து கஷ்டப்பட்டேன். ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த இலவச நிலம் வழங்கும் திட்டத்தால் எங்கள் வாழ்வே தலைகீழாக மாறிவிட்டது. இப்போது நாங்கள் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்ற சுதந்திரப்பறவைகள். எங்களுக்கென்று சொந்தமாக ஒரு நிலம் இருக்கிறது. அதில் உரிமை யோடும், மகிழ்ச்சியோடும் உழைக்கிறோம். அதன் பலனை நாங்கள் அனுபவிக்கும்போது எல்லையில்லாத ஆனந்தம் அடைகிறோம். ஏழை விவசாயத் தொழிலாளர் களாகிய எங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நில உரிமைக்காரர்களாக மாற்றியுள்ளார்கள். வாழ்நாளெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நாங்கள் வாழ்த்திக்கொண்டே இருப்போம்; என்றும் நன்றி உள்ளவர்களாக நாங்கள் இருப்போம்" என்று மகாலிங்கம் ஆனந்த கண்ணீரோடு கூறினார்.

**"காலமெல்லாம் கூலித்தொழிலாளியாக இருந்த எங்களை ஒரு நிலத்துக்குச் சொந்தக்காரராய் மாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் காலமெல்லாம் நன்றியுடையவர்களாக இருப்போம்"**

நாகை மாவட்டத்தில் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 5 கட்டங்களாக 1,572 குடும்பங்களுக்கு 574.11 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. 629 குடும்பங்களுக்கு 863 ஏக்கர் நிலம் மேம்பாடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் நிறுவனங்கள் உள்ளூர் வாசிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதுடன், அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தால் மேலும் கூடுதலாக ஊக்க சலுகைகள் வழங்கப்படும் என அரசு அறிவிப்பு.

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்

# 27 - நட்சத்திர சுற்றுலா

– டாக்டர். **எம்.இராசாராம்,** இ.ஆ.ப.,

இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. அவற்றுள் 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா, 6 நாட்கள் மூகாம்பிகைச் சுற்றுலா, 3 நாட்கள் நவக் கிரகச் சுற்றுலா மற்றும் 4 நாட்கள் 108 அம்மன் திருக்கோயில் சுற்றுலா ஆகிய வரிசையில் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப "27 நட்சத்திர சுற்றுலா" தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இது ஐந்து நாட்கள் சுற்றுலாவாகும்.

| | நட்சத்திரம் | வழிபாட்டுத் தலம் | சுவாமியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பூராடம் | திருநாவலூர் | அருள்மிகு குரு பகவான் |
| 2. | ரேவதி | ஓமாம்புலியூர் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 3. | மகம் | சிதம்பரம் | அருள்மிகு தில்லைக்காளி |
| 4. | ரோகிணி | திருநாகேஸ்வரம் | அருள்மிகு நாகநாதசுவாமி |
| 5. | அனுஷம் | திருவிடைமருதூர் | அருள்மிகு மூகாம்பிகை |
| 6. | மிருகசீரிஷம் | கதிராமங்களம் | அருள்மிகு வனதுர்காதேவி |
| 7. | பூரம் | திருமணஞ்சேரி | அருள்மிகு உத்வாசநாதர் |
| 8. | அசுவனி | திருநள்ளாறு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 9. | உத்திராடம் | தருமபுரம் | அருள்மிகு தட்சிணாமூர்த்தி |
| 10. | உத்திரட்டாதி | திருவையாறு | அருள்மிகு தட்சிணாமூர்த்தி |
| 11. | கிருத்திகை | நாகப்பட்டினம் | அருள்மிகு நாகநாதர் |
| 12. | அஸ்தம் | திருவாரூர் | அருள்மிகு ராஜ துர்கை |
| 13. | சித்திரை | திருவாரூர் | அருள்மிகு ராஜ துர்கை |
| 14. | திருவாதிரை | திருக்கொள்ளிக்காடு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 15. | புனர்பூசம் | ஆலங்குடி | அருள்மிகு குருபகவான் |
| 16. | சுவாதி | திருவானைக்காவல் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 17. | மூலம் | மதுரை | அருள்மிகு மீனாட்சியம்மன் |
| 18. | விசாகம் | சோழவந்தான் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 19. | ஆயில்யம் | திருப்பரங்குன்றம் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 20. | பூசம் | குச்சனூர் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 21. | கேட்டை | பல்லடம் | அருள்மிகு அங்காள பரமேஸ்வரி |
| 22. | திருவோணம் | தெட்டுப்பட்டி | அருள்மிகு ராஜ காளியம்மன் |

| | | |
|---|---|---|
| 23. உத்திரம் | மூலனூர் | அருள்மிகு வாஞ்சியம்மன் |
| 24. சதயம் | திருச்செங்கோடு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 25. அவிட்டம் | கொடுமுடி | அருள்மிகு சனீஸ்வரர் |
| 26. பூரட்டாதி | காஞ்சிபுரம் | அருள்மிகு ஆதிசேடன் |
| 27. பரணி | திருவாலங்காடு | அருள்மிகு மகாகாளி |

இச்சுற்றுலா ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அவரவர் பிறந்த ஜென்ம நட்சத்திரத் தலங்களாகப் போற்றப்படும் வழிபாட்டு இடங்களை தரிசனம் செய்து விட்டு ஞாயிறு மாலை 6.00 மணி அளவில் சென்னை வந்தடையும்.

இந்தச் சிறப்புச் சுற்றுலாவிற்கான கட்டணம்:
பெரியவர் ரூ.3,800/–
(ஒரு நபர் மட்டும்)
சிறுவர் ரூ.3,200/–
(ஒரு நபர் மட்டும்)



சுற்றுலாவின் போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி மற்றும் திருக்கோயில் தரிசன வசதி ஆகியவைகளைச் சிறப்பான முறையில் செய்து வருகிறது.

சுற்றுலாவின்போது இரவு தங்கும் இடங்கள் –

1. வைத்தீஸ்வரன் கோயில்,
2. தஞ்சாவூர்
3. மதுரை,
4. காஞ்சிபுரம்

சுற்றுலாப் பயணிகள் மேலும் விவரங்கள் மற்றும் பயண முன்பதிவு பெற கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
சுற்றுலா வளாகம்,
எண். 2, வாலாஜா சாலை,
கலைவாணர் அரங்கம்,
சென்னை – 600 002.

தொலைபேசி எண்.
044–25383333 / 25384444/ 25389857
மின் அஞ்சல் ttdc@vsnl.com.
இணையதளம்
www.tamilnadutourism.org
நிகரி 044 - 25361385

2) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக
விற்பனைப் பிரிவு
எண். 4, ஈ.வெ.ரா சாலை,
சென்னை –600 003
தொலைபேசி எண் 044 - 25384356 / 25382916

★ ★ ★

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாய்கோ வங்கி
TAICO BANK

தாய்கோ வங்கி,
தாளமுத்து நடராசன் மாளிகை,
எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.
தொ.பே.எண் 044–28411643, 044–28547952
மின் அஞ்சல்: taico@dataone.in/taico@vsnl.net

தமிழகம் முழுவதும் ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருட்கள், கைத்திறன், சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றை பயன்படுத்தி கூட்டுறவு முறையில் தொழில் நிறுவனங்களை நிறுவி வேலை வாய்ப்பு, நல்ல வருமானம், நியாயமான விலை ஆகியவை கிடைக்கப் பெறவும், அதற்கான கடன் வசதிகளைப் பெறவும், மாவட்ட தொழில் மையங்களையோ அல்லது எமது வங்கி கிளைகளையோ அணுகலாம்.

<u>பொது மக்களுக்கான கடன் வசதிகள்:</u>

வீடு அடமானக் கடன், வீடு கட்டக் கடன், அதிகபற்றுக்கடன், அரசு பத்திரங்களின் மீது கடன், வைப்புநிதிகளின் மீது கடன், நகைக்கடன் ஆகிய கடன் வகைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று பயனடைவீர்!

வைப்புத் தொகைகளுக்கு கூடுதலாக வட்டி பெறுவீர்!
முதியோரின் வைப்பு தொகைகளுக்கு 1% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

வைப்பு நிதிகளுக்கு அதிக வட்டி! கடன்களுக்கு குறைந்த வட்டி!
நிறைந்த பாதுகாப்பு! சிறந்த சேவை!

## தாய்கோ வங்கியில் முதலீடு செய்து பயனடைவீர்!

மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளைகளை தொடர்பு கொள்ளவும்

### வங்கி கிளைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன்னூர் | கோவில்பட்டி | சாத்தூர் | மதுரை | திருச்சி | சேலம்* | வேலூர்* |
| 0423 2206003 | 04632 220547 | 04562 260359 | 0452 2343464 | 0431 2462745 | 0427 2313189 | 0416 2212597 |
| நாகர்கோவில் | சேப்பாக்கம் | கோயம்புத்தூர் | தஞ்சாவூர் | திருநெல்வேலி* | நெய்வேலி* | ஈரோடு* |
| 04652 233741 | 044 28547751 | 0422 2529207 | 04362 238286 | 0462 2322921 | 04142 268849 | 0424 2268024 |
| அம்பத்தூர்* | காஞ்சிபுரம் | திருவண்ணாமலை | திண்டுக்கல் | காரைக்குடி | ஆழ்வார்பேட்டை | ஆத்தூர் |
| 0424 26540223 | 044 27223562 | 04175 251058 | 0451 2433351 | 04565 233881 | 044 24342463 | 04282 242070 |
| கூடலூர் | தர்மபுரி | சிவகாசி | கரூர் | தேனி | வியாசர்பாடி | நாமக்கல் |
| 04262 263712 | 04342 266744 | 04562 276867 | 04324 262636 | 04546 252163 | 044 25516566 | 04286 277616 |
| திருவாரூர்* | கிருஷ்ணகிரி* | எழும்பூர் | | | | |
| 04366 220090 | 04343 230377 | 044 28411643 | | | | |

* பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது

வெளியீட்டு ஆணை எண்.2126/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் 2007, நாள் : 19.12.2007



# கோ–ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-0
TN/PMG(CCR) WPP-518/06-08
தமிழரசு




தமிழ்நாடு சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளாகம்,
வாலாஜா ரோடு,சென்னை- 600 002.
முன்பதிவு தொடர்புக்கு : 2538 3333, 2538 8785, 2538 1640 ஃபேக்ஸ் : 2536 1385, 2536 6633